
AHARAM
அகரம்

எண்: 11 எழுத்து: 06-07 ஜீன் -ஜுலை - 2017 | ரமழான்-ஷவ்வால் 1438

பொது சன நூலகம்
12 JUL 2017
மாநகர சபை
யாழ்ப்பாணம்



# குணம் தரும் அத்திப் பழம்

"அத்தியின் மீதும் ஒலிவத்தின் (ஸைத்தூன்) மீதும் சத்தியமாக." (95:1)

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

www.aharam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான்

## மாதத்தில்...

ரமழான் மாதம் கடந்தாலும் அது கற்றுத் தந்த பாடங்களால்
வாழ்க்கையை அழகாகவும் அர்த்தமுள்ளதாகவும்
மாற்றிடுவோம்.

ரமழான் மாதத்தில்...
எம் நாவுகளில் அல்குர்ஆன் இழையோடிக் கொண்டிருந்தது.
அதேபோல... இனியும் அல்லாஹ்வின் வார்த்தைகள்
எம் வாழ்க்கையில் தொடர்ந்திருக்கட்டும்.


ரமழான் மாதத்தில்...
உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் பொழுதில் நாம் எழுந்து
அல்லாஹ்வை வணங்கினோம். அதேபோல இனியும்
அதிகாலையில் எமக்கே, எமக்காக அடிவானிற்கு இறங்கும்
அல்லாஹ்வை சந்திக்க எழுந்திடுவோம்.

ரமழான் மாதத்தில்...
எவ்வித பாகுபாடுமின்றி தோளோடு தோள் சேர்த்து ஏகனை
நின்று வணங்கினோம். அதேபோல இனியும்... சமூக
பணிகளில் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்.

ரமழான் மாதத்தில்...
தீய வார்த்தைகளை விட்டு தவிர்ந்திருந்தோம்.
இனியும் அசுத்தமானதும் அநாகரிகமானதுமான
வார்த்தைகளை விட்டு விலகியிருப்போம்.

ரமழான் மாதத்தில்...
ஏழைகளின் பசியறிய நோன்பு நோற்றோம். இனி அந்த
ஏழைகளின் கண்ணீர் துடைக்க பாடுபடுவோம். கண்ணீரற்ற
கவிதை தேசமாக எம் தேசம் மாற வேண்டும்
என பாடுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**திருக்குர்ஆன் ஒரு படைப்பினத்தைப் பற்றிக் குறிப்பிடுமானால், அதிலும் அதன் மீது அல்லாஹ் சத்தியமிட்டுக் கூறியிருந்தால் அதற்குத் தனிச் சிறப்புண்டு. அல்லாஹ் திருக்குர்ஆனில் சத்தியமிட்டுக் கூறியவற்றின் வரிசையில் உள்ள மற்றுமொரு பிரதானமான தாவரம்தான் அத்தி.**











AHARAM
# அகரம்

எண்: 11 - ஜூன் - ஜூலை : 2017
எழுத்து: 06-07






**ஆசிரியர்**
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

**துணை ஆசிரியர்**
வ. முஹம்மத் நபீல்

**தளக் கோலம்**
எம்.ஐ.எம். ஹாரீஸ்


**பாடத்திட்டம்**


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |





36


**தொடர்புகளுக்கு:**

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல் மிக்க ஆளுமை

மாணவ பருவம் ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் பசுமையான ஒரு காலமாகும். கவலை ஏதும் நெஞ்சில் இல்லாத, காற்றில் பறக்கும் மென்மை மனசு கொண்ட வசந்த காலம் அது. இனிமை நிறைந்த மாணவப் பருவத்தில் மிகவும் சரியான முறையில் திட்டங்களை உருவாக்கி கற்றல் செயற்பாடுகளில் சீராக ஈடுபட்டவர்கள் மட்டும்தான் வாழ்க்கையின் வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்கிறார்கள். அந்தப் பருவத்தில் தங்களின் எதிர்காலம் குறித்து மாணவர்கள் சரியாக சிந்தித்து செயல்பட்டால் மாத்திரமே அவர்களின் வாழ்க்கை மிகவும் பிரகாசமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மாணவப் பருவத்தில் வகுப்பறைக் கற்பித்தல், பாடப் புத்தகங்களுக்கு அப்பால் மாணவர்கள் தமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டிய நிறைய பண்புகள் காணப்படுகின்றன. அதில் முக்கிய பண்புகளில் ஒன்றாக துணிச்சலைக் குறிப்பிட முடியும். ஒரு மாணவனின் ஆரோக்கியமான ஆளுமை வெளிப்பாடுகளில் துணிச்சல் மிகவும் இன்றியமையாதது. சிறு வயதிலேயே தன்னம் பிக்கையுடன் கூடிய துணிச்சல் மாணவர்களிடம் வளர்ந்து விட வேண்டும். கோழைத்தன மில்லாமல் எதனையும் நேர்மையாக பேசுகின்ற, செயற்படுகின்ற மனோநிலை உருவாக வேண்டும். தாம் நினைத்த இலக்குகளை சாதிக்க முடியும் என்ற மனோ வலிமை காணப்பட வேண்டும். சிறுவயதிலேயே எம்மில் வளரும் துணிச்சல் பண்புகளே எதிர் காலத்தில் நாம் சாதிப்பதற்கும், சோதனைகள் வரும்போது அவற்றை மனவுறுதியுடன் எதிர்கொள்வதற்குமான பக்குவத்தை எம்மில் ஏற்படுத்தும். உதாரணமாக, பின்வரும் வரலாற்றுச் சம்பவத்தை எமக்கு ஒரு படிப்பினையாக நினைவுபடுத்தலாம்.

கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம். அவர் மிகவும் கண்டிப்பானவர்; நீதி தவறாதவர். தனது ஆட்சியில் குடிமக்கள் எவ்வாறு இருக் கிறார்கள் என்பதில் அதீத அக்கறை கொண்டவர். அவரது பெயரைக் கேட்டால் அன்றைய அரபுக் கோத்திரங்களின் தலைவர்கள் கூட நடுங்கி விடுவார்கள். அதே போல், கலீபா உமர் அவர்கள் மிகவும் இரக்க சுபாவம் கொண்டவர் என்பதும் அவருடைய சரித்திரத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களது ஆட்சிக் காலத்தில் ஒரு நாள் மதீனா நகரத்தின் வீதியில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியியல் கலீபா உமர் அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி அவர்களது காதுகளை எட்டுகிறது.

''கலீபா வருகிறார்... கலீபா வருகிறார்'' என்று சப்தமிட்டபடி ஒரு சிறுவன் ஓடினான். உடனே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மற்ற சிறுவர்களும் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடினர். விளையாடிக் கொண்டிருந்த எல்லா சிறுவர் களும் ஓடிவிட்டார்கள். ஆனால், ஒரே ஒரு சிறுவன் மட்டும் ஓடாமல் தைரியமாக அந்த தெருவிலே நின்று கொண்டிருந்தான். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அந்த தெருவுக்குள் நுழைந்து விட்டார். அப்படியே அந்தச் சிறுவனை நெருங்கினார். அச்சிறுவனைப் பார்த்துக் கேட்டார். ''எல்லா சிறுவர்களும் ஓடிப்போய் விட்டார்கள். நீ மட்டும் ஏன் ஓடாமல் நிற்கிறாய்'' அதற்கு அந்த சிறுவன் கூறினான்: ''கலீபா அவர் களே! உங்களைக் கண்டு பயந்து ஓடுவதற்கு நான் உங்களுக்கு எந்தத் தவறும் செய்ய வில்லையே! நான் வழிவிட்டால்தான் நீங்கள் போக முடியும் எனும் அளவுக்கு இந்த தெரு ஒன்றும் குறுகியதாகவும் இல்லையே...''

இதனைக் கேட்டு ஆச்சரியமடைந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அச் சிறுவனது முதுகைத் தட்டி அவனது துணிச்சலான பதிலைப் பாராட்டினார்கள். அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில் இஸ்லாத்தை வாழவைப்பதற்காகப் போராடிய வீரரான அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆவார்.

மேற்படி நபித்தோழரின் சரித்திரம் இளம் வயதில் நாம் துணிச்சலுடன் செயற்படும்போது அது எமது எதிர்காலம் ஒளிமயமானதாக மாற்றும் என்பதற்கான எடுத்துக் காட்டாக அமைகிறது. எனவே, நாமும் எமது மாணவப் பருவத்தில் துணிச்சல் மிக்க மாணவர்களாக நேர்மையுடன் செயற்படுவோம். வெற்றிகள் நிச்சயம் எம்மை வந்து சேரும், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபுஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''பாங்கு கூறுவதிலும், (ஜமாஅத்தாக தொழும்போது) முதல் வரிசையில் (நின்று தொழுவதிலும்) உள்ள சிறப்பை மக்கள் அறிந்தால், அவ்விரண்டும் சீட்டுக் குலுக்கல் மூலம்தான் பெற முடியும் என்றிருந்தால், அவர்கள் அதற்கும் தயாராகி சீட்டுக் குலுக்குவார்கள்.'' (புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், மேற்கூறப்பட்ட ஹதீஸில் இரு முக்கிய மான விடயங்களை பேசியுள்ளார்கள். அவற்றுள் இரண்டாவது விடயமான தொழுகையில் முதல் வரிசையில் நிற்பதன் சிறப்புக்கள் தொடர்பில் நாம் அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

அல்லாஹுத் தஆலா அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்:

''ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை.'' (51:56)

மேற்படி வசனத்தினூடாக, தன்னை இபாதத் செய்வதுதான் மனித படைப்பின் பிரதான நோக்கம் என அல்லாஹ் குறிப்பிடுகின்றான். இபாதத் என்றால் அடிமைப்படுவது, பணிபுரிவது என்ற பொருள்களைத் தருகின்றது.

அல்லாஹ்வுக்கு இபாதத் புரிவதென்பது வாழ் வின் எச்சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வுக்கு மட்டுமே வழிபட்டு நடத்தல், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மட்டுமே அடிபணிதல், அல்லாஹ்வுக்கு மட்டுமே சிரம் தாழ்த்துதல் என சுருக்கமாக குறிப்பிடலாம்.

இஸ்லாத்தில் தொழுகை மிக முக்கிய இபாதத் தாகும். சிறுவர், புத்தி சுவாதீனமற்றோர், மாதாந்த பிரசவ தொடக்குடையோரைத் தவிர அனைவர் மீதும் எப்போதும் நிறைவேற்ற வேண்டிய கடமையாக தொழுகை உள்ளது. நபியவர்கள் தனது மரணத் தறுவாயிலும் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

தொழுகையில் அலட்சியமாக இருப்போர் மறுமையில் தங்குமிடம் வைல், கைய்யா, ஸகர் போன்ற நரகங்களாகும் எனவும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இத்தகைய தொழுகையை முன்வரிசையில் நின்று தொழுவதால் அல்லாஹ்விடத்தில் எமக்கு ஏற்படும் பாக்கியம் பற்றியே மேற்படி ஹதீஸ் குறிப்பிடுகின்றது. இந்த ஹதீஸின் பிரகாரம், ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுதல் மற்றும் அதனை முன்வரிசையில் நின்று நிறைவேற்றுதல் என்ற இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

சமகாலத்தில் இவ்விரண்டு விடயங்களையும் பலர் அலட்டிக் கொள்வதில்லை. அதான் ஒலி கேட்கும்போது கூட விளையாட்டுக்களிலும், தொடர் நாடகம் பார்த்தல் மற்றும் நீண்ட நேர கிரிக் கட் போட்டிகளைப் பார்த்து ரசித்தல் போன்ற வீண் பொழுதுபோக்குகளிலும் அவர்கள் நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அதிகமான பள்ளிவாசல்களில் தொழுகை ஆரம பிக்கும்போது ஒருசிலரைத் தவிர பெரும்பாலான வர்கள் இருப்பதில்லை. இச்செயற்பாடு தொழுகை யிலுள்ள அலட்சியத்தையே காட்டுகின்றது.

முதல் வரிசையில் நின்று தொழுவதால் அல்லாஹ் எமக்கு வழங்குகின்ற பாக்கியங்கள் அளப்பெரியவை. அவை எமது கண்களுக்கத் தெரிவதில்லை. அது எமது கண்களுக்குத் தெரியுமாயின் அதற்காக நாம் போட்டி போட்டு சீட்டுக் குலுக்கும் நிலை ஏற்படும் என்பதாக நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வும் மலக்குகளும் (தொழுகையில்) முன்வரிசையில் உள்ளவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள். (அஹ்மத்)


அல்லாஹ் தனது அடியான் மீது ஸலவாத்துச் சொல்வதென்பது அவன் தனது அடியான் மீது தனது அருள்களை கணக்கின்றி வாரி வழங்குவதாகும் என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம்.

எனவே, ஸஃபான் மாதத்தில் காலெடுத்து வைத்து, ரமழானுக்காக எம்மை நாம் தயார்படுத்திக் கொண் டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், வெறுமனே நோன்பு நோற்பதற்கு மட்டும் தயாராகாமல் தொழுகையிலும் எம்மை நன்கு பயிற்றுவிப்புக்கு உள்ளாக்குவோம்.

அந்த வகையில், அதான் ஒலிப்பதற்கு முன்னர் பள்ளிவாசலுக்குச் செல்தல், முன்வரிசையில் உட் கார்ந்திருத்தல், முன் பின் சுனத்துக்களை கடைப் பிடித்தல், அதிகமாக திக்ர் செய்தல் போன்றவற்றை தவறாது கடைப்பிடித்தல் போன்ற இச்செயற்பாடு களே எம்மை அல்லாஹ்விடத்தில் உயர் அந்தஸ்த் தைப் பெற்றுத்தரக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 04

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# காபிலின் காகம்

''அல்லாஹ்! நீ ஆபிலின் குர்பானியை அங்கீகரிப்பாயாக'' என நடுநிலையான நியாயவாதியான நிலையில் நான் உள்ளத்தால் பிரார்த்தித்தேன்.

ஆகாயத்தில் இருந்து திடீரென ஓர் அக்னி இறங்கி வந்தது! அது ஆபிலின் குர்பானியை மூடியது. ஆபிலின் குர்பானி அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்பதே இதன் அர்த்தம். ஆபில் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். அல்லாஹ்வைப் புகழும் வார்த்தைகளும் கீர்த்தனைகளும் அவனது வாயிலிருந்து வெளிப்பட்டன.

காபிலின் நிலை படு அட்டகாசமாக இருந்தது! அவன் ஆபிலை கொல்வதாக கூக்குரலிட்டான். தனது இரு கைகளையும் முன்னால் விரித்த வண்ணம் அடிவானத்தை நோக்கியவாறு சிந்தனையில் மூழ்கி விட்டான். அவனது உள்ளத்தில் பொறாமை நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

அல்லாஹ் வழங்கிய ஓர் அழகிய தினம். சூரியன் தனது கிரணங்களை நாலா புறமும் செலுத்திக் கொண்டு அடிவானம் வரை நீண்டு கிடந்த பைன் மரங்களினூடாக மெல்ல எட்டிப் பார்த்தான். இக்கதிர்கள் அம்பரின் நிறத்தைக் கொண்டிருந்தன. பச்சைக் கம்பளம் விரித்த பரந்த வெளிகளில் பூத்த மலர்களிலிருந்து கமழ்ந்து வந்த சுகந்தம் நாசியைத் தழுவிச் சென்றது. மலைத் தொடர்களைத் தழுவிய இதமான தென்றல் இந்த மணத்தையும் சுமந்து வந்தது.

காபில் ஆவேஷத்துடன், ''உன்னைக் கொல்வேன்'' என்று மீண்டும் கர்ஜித்தான்.

காபில் எதற்காகத் தன்னுடன் கோபிக்கின்றான் என்று ஆபிலுக்குப் புரியவில்லை. களங்கமில்லா வெள்ளையுள்ளம் கொண்ட ஆபிலுக்கு குற்றங்களினதும் துரோகங்களினதும் வேர்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமாக இருக்கவில்லை.

ஒருவருடைய குர்பானை அல்லாஹ் அங்கீகரித்துக் கொண்டான், மற்றவருடையதை அங்கீகரிக்கவில்லை.

''பக்தியோடு ஒன்றைச் செய்யும்போதே அல்லாஹ் அதனை அங்கீகரித்துக் கொள்கின்றான்.'' ஆபில் தனது சகோதரனிடம் சொன்னான்.

''உன்னை நான் கொல்வேன்'' காபில் மீண்டும் கத்தினான்.

''என்னை நீ கொல்வதற்கு கையை நீட்டினாலும் நான் உன்னைக் கொல்ல எனது கையை நீட்ட மாட்டேன். சர்வ லோகங்களின் அல்லாஹ்வை நான் பயப்படுகின்றேன். எனது பாவத்தையும் உனது பாவத்தையும் சுமந்து கொண்டு நீ வேண்டுமானால் நரகவாசிகளில் நின்றும் ஆகிவிடு. அக்கிரமக்காரர்களின் தங்குமிடம் நரகம் தான்'' என்று கூறி விட்டு ஆபில் தனது குடிசைக்குத் திரும்பினான்.

ஆபிலுக்கும் இக்லிமாவுக்கும் திருமணம் நடந்தது. சிறிது நாட்கள் இன்பமாகக் கடந்தன. இக்லிமா கர்ப்பம் தரித்தாள். காபிலுக்கு மீண்டும் தனது சகோதரனைக் கொல்ல வேண்டும் என்ற ஆவேஷம் வந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதே சமயத்தில் ஒளிந்து கொண்டிருந்த காகத்தை நாங்கள் கண்டுபிடித்தோம். அவனது விசாரணைக்கு நாள் குறிக்கப் பட்டது.

❖ ❖ ❖ ❖

பகல் பொழுது முழுவதும் வேலை செய்து களைத்துப்போன ஆபில் மண்ணில் மல்லாந்து படுத்துக் கிடந்தான். சுகந்த மலர் களின் நறுமணம் அவனை சுகமான நித்தி ரையில் ஆழ்த்தியிருந்தது.

சூரியன் மேற்கில் சாய்ந்து கொண்டிருந் தான். நாங்கள் குற்றவாளியான காகத்தை விசாரணை செய்து கொண்டிருந்தோம்.

ஆகாயத்தில் செவ்வானம் பரவியது. காட்டில் செத்துக் கிடந்த ஒரு கழுதையின் மாமிசத்தை காட்டு மிருகங்களும் கழுகுகளும் புசித்து விட்டு எலும்புகள் மாத்திரம் எஞ்சிக் கிடந்தன. பூமி அதன் இரத்தத்தைக் குடித்தது. எஞ்சிய கூரிய எலும்பொன்று காபிலின் கையில் இருந்தது. அதனை எடுத்துக் கொண்டு அவன் பதுங்கிப் பதுங்கி நடந்து வந்தான்.

இவ்வாறு காபில் பூமியில் முதலாவது ஆயுதத்தை ஏந்தினான். தனது சகோதரனைத் தேடி அவன் அந்த ஆயுதத்துடன் நடந்தான். படுத்து உறங்கிக் கொண்டிருந்த தனது சகோதரனைக் கண்ட காபில் அவனை நோக்கி நடந்தான்.

சாந்தமான முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்த ஆபிலின் வதனத்தில் இருந்த ஏதோ ஒன்று காபிலில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியது. அது என்ன வாயிருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆபில் திடீரென விழித்துக் கொண்டான். மறுகணம் சற்றும் தாமதிக்காது கையிலிருந்த எலும்பினால் ஆபிலின் முகத்தில் காபில் அடி த்தான். சுதாகரிக்கும் முன்னர் அடிக்கு மேல் பல அடிகள்! ஆபிலின் முகத்திலிருந்து பீரிட்ட இரத்தம் காபிலின் நெஞ்சை நனைத்தது.

அடித்து ஓய்ந்த காபிலின் கரங்கள் சோர்ந்து போயின. ஆபில், பூரணமாக அசைவற்றுப் போனான். தனது சகோதரன் மரணித்து விட்டான் என்று காபிலுக்குத் தோன்றியது. ஆயினும், அடிப் பதை நிறுத்தவில்லை! இறந்த பின்னும் அவன் தனது சகோதரனின் பிணத்துடன் மூர்க்கமாக நடந்து கொண்டான்.

குற்றவாளியான காகத்தின் மீதான விசாரணை அப்போதும் தொடர்ந்தது. முடியாததனால் அடுத்த நாளுக்குத் தள்ளிப் போடப்பட்டது. குற்றவாளி தப்பிப் போகாமல் காவல் ஏற்படுத்தப்பட்டது. நாங்கள் பிரிந்து சென்றோம்.

காபிலின் முகத்துக்கு நேரே இருந்த மரக்கிளையிலிருந்து நான் உரத்த குரலில் கரைந்தேன். ''உனது சகோதரன் ஆபிலை நீ என்ன செய்து விட்டாய்?''

அவன் தலையை உயர்த்தி என் னைப் பார்த்தான். அவனது முகம் விறைத்தது.

நீண்ட நாட்கள் தொடர்ந்த விசாரணையில் குற்றவாளியான காகம் தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆயினும், தொடர்ந்து முன்வைக் கப்பட்ட அசைக்க முடியாத சாட்சிகளால் அவனால் தொடர்ந்து மறுக்க முடியவில்லை!

இதே சமயம், இறந்த தனது சகோதரனின் பிணத் துடன் காபில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தான். அவனுக்குத் தனது சகோதரனின் பிணத்தை என்ன செய்வது என்று தெரியவில்லை! பருந்துகளும் கழுகுகளும் ஏன் மாமிசம் உண்ணும் விலங்குகளும் அவனைத் தொடர்ந்தன! மிருகங்கள் பிணத்தைக் கடித்துக் குதறிவிடும் என்று காபில் பயந்தான். எனவேதான், அவன் தொடர்ந்து நடந்து கொண டிருந்தான். இந்தப் பிணத்தை என்ன செய்வது என்று அவனுக்குப் புலப்படவில்லை.

காகத்தின் மீதுள்ள விசாரணைகள் ஒருவாறு முடிவுக்கு வந்தன. அவன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டான்! நீதிமன்றம் அவனுக்கு மரண தண்டனை விதித்தது.

❖ ❖ ❖ ❖

குற்றத்தை ஒப்புக் கொண்ட பின்பு மரண தண்ட னை விதிக்கப்பட்ட காகத்தின் மீதான தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவனது இறந்த பிணத்தைப் புதைப்பதற்கு ஓர் இடத்தைத் தேடி நான் பறந்து கொண்டிருந்தேன். புதைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

அப்போது ஏதோ ஒரு சக்தி என்னை காபிலை நோக்கிப் பறக்குமாறு தூண்டியது. நான் காபிலை ஒருபோதும் விரும்பவில்லை. ஆயினும், அவனை நோக்கிப் பறப்பதை என்னால் தவிர்க்க முடிய வில்லை. எனது சிறகுகள் எனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லை.

அப்போது புனித மலக்குமார்களில் ஒருவர் என்னோடு பேசினார்: ''ஏ காகமே! ஆதமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரனுக்கு அவனது சகோதரனின் சவத்தை எவ்வாறு அடக்கம் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொடுக்கும் மகத்தான பொறுப்பு இறைவனால் உனக்குச் சுமத்தப்பட்டுள்ளது.''

உடனே சுமந்து கொண்டிருந்த காகத்தின் பிணத்துடன் நான் காபிலின் முன்பு இறங்கினேன்.

பிணத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு நான் எனது அலகாலும் கால்களினாலும் நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தேன்.

பின்னர் குழியில் காகத்தின் பிணத்தைத் தூக்கி வைத்தேன். இரண்டு தரம் கா... கா... என்று கரைந்து விட்டு குழியில் மண்ணை நிரப்பினேன். அதற்குப் பிறகு நான் மனித புத்திரனைப் பார்த்தேன்.

எனது கண்கள் அவனிடம் சொன்ன செய்தி இதுதான். ''நாங்கள் நீதி பூர்வமாக இவனைக் கொலை செய்தோம். பின்னர் அவனது பிணத்துக்கு செய்ய வேண்டிய உரிய மரியாதையைச் செய்து இப்போது அடக்கம் செய்துள்ளோம். ஆயினும் நீயோ... ?''

நான் பறந்து அகன்று செல்லும்போது காபில் தனக்குத்தானே பேசும் சொற்கள் எனக்குக் கேட்டன.

''ஐயோ! இந்தக் காகத்திற்கு இருக்கும் அறிவுகூட எனக்கு இல்லையே! எனது சகோதரனின் பிணத்தைப் புதைப்பதற்குக் கூட எனக்குத் தோன்றவில்லையே!''

தன்னுடைய குற்றத்தை உணர்ந்து கொண்டு பச்சாதாபப்பட்டுத்தான் இந்த வார்த்தைகளை காபில் சொன்னது போல் எனக்குத் தோன்றியது. அவனது பச்சாதாபம் எதிலிருந்து ஊற்றெடுத்தது என எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு காலமும் ஒழுங்காகப் பேசி அறியாத அவனையும் மீறி வந்த பச்சாதாப வார்த்தைகளா அல்லது தான் அநியாய மாக இக்கொலையைச் செய்து விட்டேனே என்ற பச்சாதாபமா எனக்குத் தெரியவில்லை.

என்னை மிகவும் பாதித்த விடயம் ஆபிலின் மனைவியின் நிலையாகும். அவளுக்கு பிரசவம் நெருங்கியிருந்தது என்ற செய்தி என்னை சமாதானப் படுத்தியது.

இறை பக்தியுள்ள ஒரு நல்ல மானிட சந்ததிகள் உருவாக உள்ள வாய்ப்பு என்னை ஆசுவாசப் படுத்தியது.

காபிலின் சந்ததிகள் பூமியில் பரவுவார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கும் இறை பக்தனாகிய முதலாவது ஷஹீத் என்ற அந்தஸ்துப் பெற்ற நல்லவனாகிய ஆபிலின் சந்ததிகளுக்கும் இடையிலான போராட்டம் முடிவடையப் போவ தில்லை என்பதையும் நான் அறிவேன்.

இவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆயினும், இதற்குப் பின்னாலுள்ள ஞானம் எனக்கு அஞ்ஞான மாகவே இருக்கின்றது. எனக்கு தரப்பட்டிருப்பது பகுத்தறிவல்லவே. அது, ஆதமின் புதல்வர்களுக் குத்தான் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கு இதன் யதார்த்தம் தெரிந்திருக்கக் கூடும்.

ஆதமின் புத்திரன் செய்த கொலைக்கு சாட்சியாக நான் இருந்தேன். காலச் சக்கரத்தின் ஒரு நிமிடத்தில் அவனுக்கு குருவாகவும் இருந்தேன்.

**(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் ஸாலிஹ் நபியின் ஒட்டகத்தின் கதை தொடரும்)**

**சிந்தனைக் கதை**

# அடுத்தவர்களுக்கு என்ன கொடுக்கின்றோம்?

முன்பொரு காலத்தில் ஜேர்மன் இரண்டாக பிளவுபட்டிருந்தது. தலைநகரம் பெர்லினை கூட நடுவில் சுவர் எழுப்பி மேற்கு பெர்லின், கிழக்கு பெர்லின் என இரண்டாக பிரித்திருந்தனர்.

ஒருநாள் கிழக்கு பெர்லினை சேர்ந்த சிலர் ஒரு லொரி நிறைய குப்பைகளை கொண்டுவந்து மேற்கு பெர்லினுக்குள் கொட்டிவிட்டு ஓடிவிட்டனர்.

பாரிய குற்றம்தான்.

மேற்கு பெர்லினும் அவ்வாறு செய்திருக்கலாம்.

ஆனால், அவர்களோ ஒரு லொரி நிறைய பரிசுப் பொருட்களையும் பழ வகைகளையும் கொண்டுவந்து கிழக்கு பெர்லியின் பக்கம் அழகாக அடுக்கி விட்டு சென்றனர். அவற்றின் மேல் ஒரு வாசகத்தையும் எழுதிவிட்டுச் சென்றனர்.

''ஒவ்வொருவரும் தன்னிடம் என்ன உள்ளதோ அதைத்தான் மற்றவர்களுக்கு கொடுப்பார்கள்.''





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

# புகழ்ச்சி

எம்.ஏ. ரஹ்மான்

பைஸாந்திய சாம்ராஜ்யத்தின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள் 1453 இல் முஸ்லிம் படைகளிடம் வீழ்ச்சியடைந்தது. மன்னரான இரண்டாம் முஹம்மது அவர்கள் கொன்ஸ்தாந்திநோபிளின் அரசனைக் கைது செய்யவோ, அன்றேல் அவன் பிணத்தைக் கண்டுபிடிக்கவோ உத்தரவிட்டார். பிரேதக் குவியல்களின் கீழே கொன்ஸ்தாந்திநோபிளின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. அந்தப் பிரேதத்தை உரிய கௌரவமளித்து அடக்கம் செய்யும்படி கட்டளை இட்டார்.

அந்த சாம்ராஜ்யத்தின் மாமந்திரியாக விளங்கியவர் லூக்காஸ் நோராறஸ். அவன் முஹம்மது சுல்தானுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டபோது அவன் தன்னுடைய சொத்துக்கள் முழுவதையும் சுல்தானின் காலடியில் வைத்தான்.

சீற்றம் கொண்ட சுல்தான், ''உங்களுடைய அரசனையும் உங்களுடைய நாட்டையும் காப்பாற்றுவதற்காக ஏன் நீர் இந்தத் திரவியம் அனைத்தையும் செலவு செய்யவில்லை?'' என்று கேட்டார்.

''இவை உங்களுடையவை. உங்களுக்காகவே ஆண்டவன் அவற்றை ஒதுக்கி வைத்தான்'' என்று முகஸ்தூதி பாடினான்.

''இதை எனக்காகவே இறைவன் ஒதுக்கி வைத்தான் என்றால், பயனற்ற எதிர்ப்பின் மூலம் அவற்றை என்னிடமிருந்து தடுத்து நிறுத்தி வைக்க உங்களுக்கு அவ்வளவு துணிச்சல் இருந்ததா?'' என்று சுல்தான் கர்ஜித்தார்.

லூக்காஸ் ஏதேதோ காரணங்களை முணுமுணுக்கத் தொடங்கினான்.

அப்பொழுது சுல்தான் அவனை அவமதிப்புடன் நோக்கி, ''என்றாலும் உன்னை மன்னிக்கின்றேன்'' என்றார்.

**சிந்தனைக் கதை**

## ஔரங்கசீப் மன்னரின் முன்மாதிரி

ஒரு தடவை இஸ்லாத்தின் மீது கோபம் கொண்ட ஐரோப்பியர் புனித அல்குர்ஆன் பிரதியை கழுதையொன்றின் கழுத்தில் கட்டி அதை இந்தியாவின் தெருக்களில் விரட்டியடித்தனர்.

இதனைக் கண்டு மிகவும் மனவேதனையடைந்த ஔரங்கசீப் மன்னனின் தாயார் உடனே ஔரங்கசீப் மன்னனை அழைத்து உடனடியாக பைபிள் பிரதியொன்றை கழுதையின் கழுத்தில் கொழுவி வீதிகளில் அழைத்துச் செல்லுமாறு ஆணையிட்டார்.

ஆனால், நீதி நெறி தவறாத அந்த மன்னரோ... ''அவர்கள் செய்ததற்கு பதிலாக அவர்களின் புனித நூலை கேவலப்படுத்துவது சரியல்ல. அதனால், அப் பாவி கிறிஸ்தவர்களின் மனம் புன்படும்'' என கூறி மறுத்து விட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் அற்புதப்படைப்பு | தொடர் - 104

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

# குணம் தரும் அத்திப் பழம்



وَالتِّينِ وَالزَّيْتُونِ ''அத்தியின் மீதும் ஒலிவத்தின் (ஸைத்தூன்) மீதும் சத்தியமாக.'' (95:1)

## அறிமுகம்

திருக்குர்ஆன் ஒரு படைப்பினத்தைப் பற்றிக் குறிப்பிடுமானால், அதிலும் அதன் மீது அல்லாஹ் சத்தியமிட்டுக் கூறியிருந்தால் அதற்குத் தனிச் சிறப்பு உண்டு. அல்லாஹ் திருக்குர்ஆனில் சத்தியமிட்டுக் கூறியவற்றின் வரிசையில் உள்ள மற்றுமொரு பிரதானமான தாவரம்தான் அத்தி. அரபு மொழியில் 'அத்தீன்' என்றும் தமிழில் 'அத்தி' என்றும் ஆங்கிலத்தில் 'Fig' என்றும் இது அழைக்கப்படுகின்றது. இது FICUS GLOMERATA, FICUS AURICULATE என்ற தாவரப் பெயரால் அழைக்கப்படுகின்றது. அத்தோடு, MORACEAE என்ற தாவரக் குடும்பத்தை இது சார்ந்துள்ளது. அத்தி மரங்களில் நாட்டு அத்தி (COUNTRY FIG), வெள்ளை அத்தி (GULAR FIG), நல்ல அத்தி (FICUS GLOMERATA CLUSTER FIG) எனப் பல வகை உண்டு.

## மரத்தின் அமைப்பு

கடும் வெப்ப, கடும் குளிர் நாடுகளைத் தவிர பொதுவான சீதோஷ்ண நிலையுள்ள அனைத்து நாடுகளிலும் அத்தி மரம் வளர்கின்றது. குறிப்பாக, ஆசிய நாடுகளில் கூடுதலாக இவற்றைக் காணலாம். அத்தியானது களிமண், நிலம் மற்றும் ஆற்றுப் படுக்கைகளில் நன்கு வளரும். அத்தி மரங்கள் 6 - 10 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியன. அடர்ந்த கிளைகளும் முட்டை வடிவிலான இலைகளும் உண்டு. மரத்தின் பட்டை, சாம்பல் மற்றும் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது. அத்தி இலைகளில் மூன்று நரம்புகள் இருக்கும். வருடத்தில் இருமுறை பூப்பூத்துக் காய் காய்க்கும். ஒரு மரத்தில் சுமார் 180 முதல் 300 கனிகள் கிடைக்கும்.

## அத்தி பூத்தாப்போல

யாருக்கும் தெரியாமல் ஒரு காரியம் செய்துவிட்டால் ''அத்திப் பூத்தாப்போல'' என்று ஒரு பழமொழி கூறுவார்கள். காரணம் அத்தி மரத்தில் பூப் பூப்பதை நம்மால் இலகுவாக அடையாளம் காண முடியாது. பூக்கள் மரத்தின் அடியிலிருந்து உச்சிவரை மரத்தை ஒட்டியே பூக்கும். அப்பூக்கள் காயாகும்போதுதான் தெரிய வரும் அத்தி பூத்திருக்கின்றது என்று. விடுகதைகளில் இப்படியும் ஒரு கேள்வி உண்டு.

காணாமல் பூப் பூக்கும்
கண்டு கண்டு காய் காய்க்கும்
அது என்ன?
வேறென்ன? அத்திதான்

## அத்தி காய் - பழம்

அத்தி காயாக இருந்து சில காலங்களில் பழமாக மாறும். அத்திப் பழத்தில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, சீமை அத்தி (Ficus Carica); மற்றையது, நாட்டு அத்தி (Racemosa). அத்திப் பழங்கள் கொத்துக் கொத்தாக மரத்தின் அடிப் பகுதியிலிருந்து தண்டின் எப்பகுதியில் வேண்டுமானாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைகள் பிரியும் இடங்களிலும் கூட கொத்துக் கொத்தாகத் தொங்கியபடி காணப்படும். காயாக இருக்கும்போது, நெல்லிக்காய் அளவில் உருண்டையாக பச்சை நிறத்திலும் பழுத்ததும் வெளிப்புறம் மஞ்சள், நாவல் போன்ற நிறங்களிலும் உட்புறம் செக்கச் சிவப்பாகவும் மாறிவிடும். பழமாக இருக்கும்போது பரவும் நல்ல மணத்தால் மனிதன் மட்டுமன்றி பறவைகள், விலங்குகள், பூச்சிகள் என அனைத்தும் அதன்பால் கவரப்படும். அத்திப் பழத்தின் விதைகள் ஆலம் பழத்தில் இருப்பதுபோல் சிறியதாக காணப்படும். வாசத்துடன் இருந்தாலும் பழத்தின் உட்புறத்தில் அதற்குள் மெல்லிய பூச்சி, புழுக்கள் இருக்கும். அவற்றை நீக்கி பதப்படுத்தாமல் உண்ண முடியாது.

## அத்திப் பழம் உண்ணும் முறை

தமிழ்நாட்டின் இயற்கை மருத்துவர் என அழைக்கப்படும் வெங்கடேஸ்வரன் அத்திப்பழம் உண்ணும் முறைகளைப் பின்வருமாறு விளக்குகின்றார்: ''அத்திப் பழத்தை நன்றாகத் தண்ணீரில் அலசிவிட்டு தோலோடு சாப்பிடும் போதுதான் முழுப் பலன் நமக்கு கிடைக்கும். காய்ந்த அத்திப் பழத்தில் இனிப்பு அதிகம் என்பதால் சர்க்கரை நோயாளிகள் அதனைத் தவிர்க்க வேண்டும். சாப்பிடுவதற்கு 2 மணிநேரத்திற்கு முன்போ அல்லது 2 மணி நேரத்திற்குப் பிறகோ அத்திப்பழம் சாப்பிடுவது சிறந்தது. காய்ந்த நான்கு அத்திப் பழங்களை இரவில் மண் குவளையில் ஊற வைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதும் நல்லது. இதனால் மலச்சிக்கல் தீரும். அத்திக்காய் துவர்ப்புச் சுவை உடையது என்பதால் அதை சமைத்தும் சாப்பிடலாம். அத்திப் பழத்தின் உள்ளே புழுக்கள் இருக்க வாய்ப்பிருக்கிறது. அதனால், புழு இல்லாத அத்திப் பழமா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டே சாப்பிட வேண்டும். அத்திப் பழத்தை ஜூஸ் செய்தும் அருந்தலாம்'' என்கிறார்.

## அத்தியில் உள்ள சத்துக்களும் அமிலங்களும்

அத்திப் பழங்களில் 84% பழச் சதையும் 16% தோலும் இருக்கும். அத்திப் பழத்தில் நியாசின், தயாமின், ரிபோஃப்ளைவின், கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, புரதம் உட்பட எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. காபோஹைட்ரேட், அமினோ அமிலங்களும் அதிகம் காணப்படுகின்றன. 100 கிராம் அத்திப் பழத்தில் புரதம் 4 கிராம், கல்சியம் 200 மி.கி, இரும்பு 4 மி.கி, விற்றமின் 100 ஐ.யு, தயாமின் 0.10 மி.கி, கலோரி அளவு 260 என்பன அடங்கியிருக்கும். உலர்ந்த அத்திப் பழங்களில் அதிக நார்ச்சத்து இருக்கும். குறைவான நீர்ச்சத்து இருக்கும் அத்திப் பழங்களில் வேறு எந்தப் பழத்திலும் இல்லாத அளவு கல்சியம் சத்தும் நார்ச்சத்தும் உள்ளது.

ஐம்பது கிராம் அத்திப் பழம் ஒன்றில் கிடைக்கும் சத்துக்கள்.

- நார்ச்சத்து : 5.8%
- பொட்டாசியம் : 3.3%
- மங்கனீசு : 3%
- விட்டமின் பி 6 : 3%
- கலோரி(37) : 2%
- புரதம் : 2 கிராம்
- கல்சியம் : 100 மி.கி.
- இரும்பு : 2 மி.கி.

அத்திப் பழத்தை ஆராய்ச்சி செய்த அறிவியலாளர்கள் இதில் மற்றப் பழங்களை விட நான்கு மடங்கு சத்துக்கள் அதிகம் இருப்பதாகவும் ஆய்வில் கூறியுள்ளனர். இதைத் தவிர விற்றமின் ஏ, விற்றமின் சி அதிக அளவிலும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவக் குணங்கள்

இத்தனை சத்துக்கள் கிடைக்கும் அத்திப் பழத்தை ஆரம்பத்தில் கிராமப் புறங்களில் மட்டும்தான் சாப்பிட்டு வந்தார்கள். மருத்துவ ரீதியாக நிறைய பலன்கள் இருப்பதை விஞ்ஞான உலகம் கண்டு அறிந்ததன் பிறகு, இப்போது உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் மருந்தாக மாறிவிட்டது. நிறைய நாடுகளில் அத்தி மரத்தை அதிகளவில் விவசாய நிலங்களில் நட்டு வளர்த்து வருகின்றனர். காரணம் அதன் மருத்துவக் குணங்கள்தான்.

சீரான இரத்த ஓட்டத்திற்கு அத்திப் பழம் வழி செய்கிறது. அத்திப் பழத்தில் கல்சியம் சத்தோடு சேர்த்து பொஸ்பரஸ் சத்தும் நிறைந்து இருப்பதால் எலும்பு வலுவடைகிறது. நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இரத்தத்தில் படிந்திருக்கும் கொழுப்பு மற்றும் உப்பு கரைகிறது. மலச்சிக்கல், ஆசனவாய் எரிச்சல், இரத்தக்கசிவு, மூலம் போன்ற பிரச்சினைகளையும் அத்தி தீர்க்கிறது. உடலில் அளவோடு இரத்தம் உற்பத்தியாகிறது. இரத்த சோகை நீங்குகிறது.

மைக்ரோ விற்றமின் சத்துகள், பி.காம்ப்ளக்ஸ் சத்துக்கள் குறைபாடு உள்ளவர்கள் தினமும் சாப்பிட்டு வர பிரச்சினைகள் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினசரி அத்தி சாப்பிடும் பழக்கமிருந்தால் பெருங் குடல் புற்று நோயைத் தடுக்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். அத்திப் பழத்தில் கலோரிகள் குறைந்த அளவில் உள்ள தால் உடல் எடை கூடாமல் சீராக இருக்கும். பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் அதிக இரத்தக் கசிவு குறையும். தலைமுடி உதிரும் பிரச்சினைகள் இருப்பவர்கள் தினமும் அத்திப் பழம் சாப்பிட்டு வந்தால் முடி உதிர்வது நின்று முடியின் வேர்கள் பலமடையும்.

அத்திப் பழம் குறிப்பாக, சர்க்கரை நோய், சர்க் கரைப் புண், உடல் வீக்கம், கட்டிகள், நீர்க்கட்டிகள், புண், சொறி சிரங்கு போன்ற பாதிப்புகள் உள்ள வர்களுக்கு மிகச் சிறந்த பலன் தருகிறது. மேலும், இவை கல்லீரல் - மண்ணீரல் அடைப்புகள், வீக்கங் களைப் போக்கப் பயன்படுகிறது.

கண்களின் பார்வையைக் கூட்டும் விற்றமின் ஏ, நிக்கோடினிக் அமிலம், அஸ்கார்பிக் அமிலம் போன்றவை அத்திப் பழத்தில் பெருமளவில் அடங்கியிருக்கின்றன. மற்றப் பழங்ளைக் காட்டி லும் அத்திப் பழத்தில் 2 முதல் 4 மடங்கு அதிகமாக தாது உப்புகளும் சத்துப் பொருட்களும் அடங்கியிருக் கின்றன. இரும்புச் சத்து, அத்திப் பழத்தில் அதிகமாக இருப்பதால், இதைத் தொடர்ந்து சாப்பிட்டு வருபவர் களுக்கு இரத்தச் சோகை நோய் வராது. இரத்த உற் பத்தி அதிகரித்து, நோய் எதிர்ப்பாற்றலும் உடலில் அதிகரிக்கும்.

உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து, சுறு சுறுப்பைத் தந்து, கரும் பித்தத்தை வியர்வை மூலம் வெளியாக்கி, ஈரல், நுரையீரலிலுள்ள தடுப்புகளை யும் நீக்குகிறது. அத்திப் பழம் தின்பதால் வாய் நாற்றம் நீங்குவதுடன் தலை முடியும் நீளமாக வளர்கிறது.

தினசரி 2 பழங்களைச் சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமன் அடையும். மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம். சிறுநீர்ப்பைப் புண், சிறுநீர்ப்பையில் கல் தோன்றுதல், ஆஸ்துமா, வலிப்பு நோய், உடல் உளைச்சல், சோர்வு, அசதி, இளைப்பு போன்ற வற்றை நீக்கவும் அத்திப் பழம் மிகச் சிறந்த பலன் தருகிறது. அத்திப் பழத்தைச் சாறு பிழிந்து அதனுடன் தேன் கலந்து மூலநோயைக் குணப்படுத்த மருந்தாகக் கொடுப்பார்கள்.

அத்தியின் இலைகளை இடித்து பவுடராக்கி தேனுடன் கலந்து உண்டால் பித்தம், மற்றும் பித்தத்தால் வரும் நோய்கள் என்பன குணம் பெறுகின்றன. உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறும்போது அவ்விடத்திற்கு இலைகளை வைத்துக் கட்டினால் இரத்தம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். வாய்ப்புண், ஈறுகள் சீழ்பிடித்தல் போன்ற நோய்களைக் குணமாக்க இலைகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து அதன் மூலம் வாய் கொப்பளிக்கலாம். அத்தி மரத்தின் பட்டையை இரவில் தண்ணீரில் ஊற வைத்துக் காலையில் குடி நீராகக் குடித்து வந்தால் வாத நோய், மூட்டுவலிகள் என்பன குணப்படும்.

அத்தி மரத்தை லேசாக கீறினால் ஒரு வித பால் வடியும். இது துவர்ப்பு மிக்கதாகும். அடிமரத்தின் கீழ் வேரைப் பறித்து வேரின் நுனியைச் சீவி விட்டாலும் பால் வடியும். இதுவே அத்தி மரத்தின் பாலாகும். இந்தப் பாலை தினமும் 300 மி.லீ. வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நீரிழிவு குணமாகும்.

அடிமரத்தின் கீழ் வேரைப் பறித்து வேரின் நுனியைச் சீவி விட்டால் பால் வடியும். இதுவே அத்தி மரத்தின் பாலாகும். தென்னை, பனை போன்ற வற்றில் பாளையில் பால் சுரக்கும். அத்தி வேரில் தான் பால் சுரக்கும். தெளிந்த இந்த நீரை நாளும் 300-400 மி.லீ. வெறும் வயிற்றில் குடித்து வந்தால் மேகநோய் போகும். நீரிழிவு குணமாகும், பெண் களுக்கு வெள்ளை ஒழுக்கு நிற்கும். உடலுக்குச் சிறந்த ஊட்ட உணவாகும். எதிர்ப்பாற்றல் பெற்று உடல் வனப்புப் பெறும்.

**சுப்ஹானல்லாஹ்!**

இலை, பிஞ்சு, காய், பழம், பால், பட்டை என அத்தித் தாவரத்தின் அனைத்துப் பாகங்களிலும் எத்தனை மருத்துவக் குணங்களை அல்லாஹ் வைத் திருக்கின்றான் என்று பாருங்கள். அதனால்தானே வத்தீன் - அத்தி மரத்தின் மீது சத்தியமாக என்று அல்லாஹ் திருமறையில் கூறியிருக்கின்றான். அவனுக்கே புகழ் அனைத்தும், அல்ஹம்துலில்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடுகளைப் பிரிக்கும் எல்லைகள்



- இந்தியா, சீனா
  - மக்மோகன் கோடு
- ஜேர்மன், போலாந்து
  - விரண்டன் பார்க் கோடு
- ரஷ்யா, பின்னிபார்
  - மேனரஹிம் கோடு
- பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான்
  - டுராண்ட் கோடு
- கிழக்கு மேற்கு ஜேர்மன்
  - பேர்லின் சுவர்
- பிரான்ஸ் பாதுகாப்புக்கு ஜேர்மனிடம் இருந்து
  - மோகினாடலைன்
- இந்தியா, பாகிஸ்தான்
  - ராட்கின் பனலன்
- ஆசியா, வடகொரியா
  - டோவர் நீரிணை
- வட அமெரிக்கா, தென் அமெரிக்கா
  - பனாமா கால்வாய்
- இந்தியா, இலங்கை
  - பாக்கு நீரிணை

✍ **பாத்திமா மத்ஹூா மன்சூர்**
**பாணகமுவ,**
**குருணாகல்**

# நிறப் புத்தகங்களை தெரியுமா?

- நீல நிறப் புத்தகம்
  - பிரிட்டிஷ் அரசின் அலுவலக அறிக்கை
- பச்சை நிறப் புத்தகம்
  - இத்தாலி அலுவலக வெளியீடுகள்
- மஞ்சள் நிறப் புத்தகம்
  - பிரெஞ்சு அலுவலக புத்தகம்
- சாம்பல் நிறப் புத்தகம்
  - ஜப்பான், பெல்ஜிய அரசுகளின் அலுவலக அறிக்கை
- வெள்ளை நிறப் புத்தகம்
  - சீனா, போர்த்துக்கல் அலுவலக வெளியீடுகள்
- செம்மஞ்சள் நிறப் புத்தகம்
  - நெதர்லாந்து அரசின் அலுவலக அறிக்கை

✍ **ஷப்னா பின்த் இலவத்தம்பி**
**பாத்திமா ஸஹ்ரா ம.அ.க.**
**ஓட்டமாவடி**

# நேரம் ஒதுக்குங்கள்

- சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள், அதுவே சக்தியின் மூலமாகும்.
- விளையாட்டுக்கு நேரம் ஒதுக்குங்கள், அது மாறா இளமையின் உறைவிடமாகும்.
- வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள், அதுவே ஞானத்தின் ஊற்றாகும்.
- தொழுகைக்கு நேரம் ஒதுக்குங்கள், அது உலகிலேயே மிகப் பெரிய சக்தியாகும்.
- அன்பு செலுத்தவும் அன்பு செலுத்தப்படவும் நேரம் ஒதுக்குங்கள். அல்லாஹ்வுக்காக அன்பு கொள்வதும் அல்லாஹ்வுக்காக வெறுத்தலுமே ஈமான் ஆகும்.
- நட்பிற்கு நேரம் ஒதுக்குங்கள், அது மகிழ்ச்சிக் கான பாதையாகும்.
- சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள், அது மிகச் சிறந்த நோய் நிவாரணியாகும். வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்.
- கொடுப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். ஏனெனில், வாழ்க்கை சுயநலம் பாராட்டுமளவுக்கு நீண்டதல்ல.
- வேலை செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள். அதுவே வெற்றியின் விலையாகும்.
- ஆனால், வீண் விரயமாக்குவதற்கு நேரத்தை ஒதுக்காதீர்கள்.

✍ **ஜே.எம். ஆதிப்**
**ஸிராஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொது அறிவு வினா விடை

01. கிரிக்கெட் விளையாட்டின் தாயகம் எது? இங்கிலாந்து
02. கேட்கும் திறனை அளவிடும் கருவி எது? ஓடியோ மீற்றர்
03. இலங்கையின் தற்போதைய நிதி அமைச்சர் யார்? மங்கள சமரவீர
04. கடிகார ஓசையின் அளவு எவ்வளவு? 30 டெசிபல்
05. தயிராக மாற்ற முடியாத பால் எது? ஒட்டகப் பால்
06. கின்னஸ் புத்தகம் எங்கு வெளியிடப்படுகின்றது? லண்டனில்
07. இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சர் யார்? தாயஸ்ரீ ஜயசேகர
08. உலக தொழிலாளர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது? மே 01 ஆம் திகதி
09. இலவசக் கல்வியின் தந்தை யார்? திரு C.W.W. கன்னங்கரா அவர்கள்
10. இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு யாது? 1994
11. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதல் நாடு எது? நியூஸிலாந்து (1893)
12. Politics என்ற நூலின் ஆசிரியர் யார்? அரிஸ்டோடில்
13. இலங்கையின் இறுதி ஆளுநர் யார்? ஹென்றி மேசன்மூர்
14. அமெரிக்காவை கண்டுபிடித்தவர்? கொலம்பஸ்

**எம்.என்.எம். மின்ஹாஜ்**
**க/தெனு/ அஸ் ஸிராஜ் க.**
**கெலிஓயா**

# இலங்கையின் பிரதான சமவெளிகள்

1. கண்டி சமவெளி
2. வெளிமடை சமவெளி
3. ஹெட்டன் சமவெளி
4. மஹவலதென்ன சமவெளி
5. கொஸ்லந்த சமவெளி

**ஹஜிஸ்தா ஹீஸைன்**
**கல்லுசியாகம**
**காகம**



# சனி கோள்

- கோள்களுள் சனி கோளுக்கு துணைக் கோள்கள் 62 உள்ளன.
- அவற்றுள் பெரியது றைற்றான் ஆகும்.
- நிற வளையங்களைக் கொண்ட கோள் சனி ஆகும்.
- சூரியக் குடும்பத்திலே பருமனில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது சனி கோள் ஆகும்.
- அழகான ஒளி வடிவம் சனி கோள்களைச் சுற்றியுள்ளது.
- தொலைநோக்கி மூலம் பார்த்தால் வானம் முழுவதிலுமுள்ள பொருட்களில் மிக அழகான பொருளாக சனி கோளைக் காணலாம்.

**ஐ.எப். அஸ்ரா**
**கிரி/ அல்அமீன் ம.க.**
**எலபடகம, பன்னல**

# நான் எனும் நான்

- ''உங்களது பாதையில் தடைகள், துன்பங்கள் இல்லா விட்டால் அது நீங்கள் சென்ற பாதை யல்ல. வேறு யாரோ சென்ற பாதை.''
- ''ஒரு முறை வீழ்ந்தால் வீழ்ந்து விட்டேனே என்று எழாமலேயே இருந்தவர்கள் ஏராளம். ஆதலால் உலகின் இழப்புகளும் உலகில் அவர்களின் இழப்புகளும் தாராளம்.''
- ''நீயும் உன்னை உலகில் இழப்பாக்கி விடாதே! விழுந்து விட்டாயா? இருக்கட்டும், எழுந்து கொள்வதற்கு உனக்கொரு சந்தர்ப்பம். சீக்கிரம் எழுந்திடு. உன் எழுதலுக்காக உலகமே காத்திருக் கிறது. இப்போது நீ எழுந்திருக்க வேண்டியது விதையாக.''

**ஏ.எப். அகீலா**
**அல் மு..மினாத் பெ.அ.க.**
**குருகொட, அக்குரணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. முகாதபீன்கள் என அழைக்கப்படுவோர் யார்?
2. காரணமோ, நேரமோ குறிப்பிடாமல் பொதுவாக "சுன்னத்துத் தொழுகிறேன்" என்ற எண்ணத்துடன் தொழும் தொழுகை என்ன பெயர் கொண்டு அழைக்கப்படும்?
3. 'உம்மு ஹிந்த்' 'தாஹிறா' என்ற புனைப் பெயர்களால் அழைக்கப்பட்டவர் யார்?
4. 'தாஹிறா' என்ற சொல்லுக்குரிய தமிழ் கருத்து என்ன?
5. அரபியில் 'ரும்மான்' என்பது ஒரு பழத்தைக் குறிக்கிறது. அப்பழம் எது?
6. அல்குர்ஆனில் ஒரு சூராவில் பிஸ்மி இடையிலும் வருகிறது. அந்த சூராவின் பெயர் என்ன?
7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காலத்தில் அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரு கோத்திரங்கள் காணப்பட்டன. இதில் கஸ்ரஜ் குழுவின் தலைவர் யார்?
8. கதீஜா நாயகியவர்களும் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), அலி (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது நபித்துவத்தின் எத்தனையாம் ஆண்டிலாகும்?
9. பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்தது குறைஷிக் குலத்திலாகும். அன்னவர்களின் வளர்ப்பு எக்குலத்தில் நிகழ்ந்தது?
10. மதுபானம் ஹராமாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு எது?
11. ஜாமிஉத் திர்மிதி ஹதீஸ் கிரந்தத்திலுள்ள மொத்த ஹதீஸ்கள் எத்தனை?
12. ஒருவரைப் பற்றிப் புறம் பேசுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. "புறம் பேசுதல் இறந்த மனிதனின் இறைச்சியைச் சாப்பிடுவது போலாகும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நவின்றுள்ளார்கள். 'புறம் பேசுதல்' என்பதன் அரபுப் பதம் என்ன?
13. முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்திய காலத்தில் மதீனா நகரைச் சுற்றியிருந்த பிரதேசங்களை 9 மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வருமான வரியைத் திரட்டுவதற்கும் தனித் தனியான குழுக்களை நியமித்தார்கள். இக்குழுக்கள் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டன?
14. இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கி.பி. 93 இல் எந்த நகரத்தில் பிறந்தார்கள்?

---

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. மாணிக்க கங்கையின் புராதனப் பெயர் யாது?
2. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எத்தனையாம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது?
3. கிழக்கு தீமோரின் சுதந்திரத்துக்காகப் போராடியவர், இந்தோனேஷியச் சிறைச்சாலையில் 6 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார், கிழக்கு தீமோர் சுயாட்சிப் பிரகடன வாக்கெடுப்பின் பின்னர் விடுதலையாகிப் பாதுகாப்புக் கருதி சிறிது காலம் அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்தார். தாய்நாட்டை மீட்டெடுப்பதற்காகப் போராடிய இத் தலைவரின் பெயர் என்ன?
4. தலிபான் இயக்கத்தின் ஆன்மிகத் தலைவரின் பெயர் என்ன?
5. பங்களாதேஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை யாது?
6. பேகம் காலிதாஷியாவின் தலைமையில் இயங்கிய அரசியல் கட்சியின் பெயர் என்ன?

(விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றாட வாழ்வில் அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# شَجَاعَةُ صَبِيٍّ

كَانَ أَمِيْرُ الْمُؤْمِنِيْنَ عُمَرُ ابْنُ الْخَطَّابِ رَضِيَ الله عَنْهُ- سَائِرًا فِيْ الطَّرِيْقِ ذَاتَ يَوْمٍ فَرَأَى أَطْفَالًا يَلْعَبُوْنَ هُنَا وَهُنَاكَ. فَلَمَّا رَأَوْهُ مُقْبِلًا عَلَيْهِمْ هَرَبُوْا إِلَّا صَبِيًّا مِنْهُمْ، بَقِيَ مَكَانَهُ حَتَّى جَاءَهُ عُمَرُ رَضِيَ الله عَنْهُ فَقَالَ لَهُ: مَا اسْمُكَ أَيُّهَا الصَّبِيُّ فَأَجَابَهُ: إِسْمِيْ عَبْدُ اللهِ. فَقَالَ لَهُ عُمَرُ رَضِيَ الله عَنْهُ لِمَ لَمْ تَهْرُبْ مَعَ أَصْحَابِكَ؟ فَأَجَابَ الصَّبِيُّ فِيْ شَجَاعَةٍ: يَا أَمِيْرُ الْمُؤْمِنِيْنَ لَمْ أَفْعَلُ ذَنْبًا فَأَفَافَكَ، وَلَيْسَتِ الطَّرِيْقُ ضَيِّقَةً فَأُوَسِّعُهَا لَكَ. فَسُرَّ عُمَرُ رَضِيَ الله عَنْهُ مِنْ شَجَاعَةِ الْغُلَامِ وَذَكَائِهِ وَحُسْنِ جَوَابِهِ.

*அமீருல் முஃமினீன் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒருநாள் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சிறுவர்கள் அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். எல்லாச் சிறுவர்களும் தங்களின் பக்கம் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வருவதைக் கண்டு விரண்டோடினர். ஒரே ஒரு சிறுவன் மட்டும் தனது இடத்தில் நின்று கொண்டிருந்தான். அப்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அச்சிறுவனிடம் வந்து, உனது பெயர் என்ன என வினவினார். எனது பெயர் அப்துல்லாஹ் என உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு அச்சிறுவன் பதிலளித்தான்.*

*உனது தோழர்களுடன் ஏன் நீ விரண்டோடவில்லை? என உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அச்சிறுவனிடம் கேட்டபோது அமீருல் முஃமினினே உங்களுக்குப் பயந்து ஓடுவதற்கு நான் எந்த வொரு குற்றமும் செய்யவில்லை. பாதையில் போக உங்களுக்கு நான் இடம் தருவதற்கு பாதை ஒடுக்க மானதாகவுமில்லை என அச்சிறுவன் பதிலளித்தான். அச்சிறுவனின் வீரத்தையும் பதிலையும் கண்டு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.*

### இணைக்குக

| الْأَسْئِلَةُ | اَلْأَجْوِبَةُ |
|---|---|
| مَا اسْمُ هَذَا الصَّبِيِّ؟ | لَا أَخَافُ مِنْ ضَابِطِ بُوْلِيْسٍ. |
| مَاذَا كَانَ الْأَطْفَالُ يَفْعَلُوْنَ؟ | نَعَمْ، فَرِحَ عُمَرُ بِجَوَابِهِ |
| هَلْ هَرَبَ عَبْدُ اللهِ مَعَ أَصْحَابِهِ؟ | لَمْ يَهْرُبْ عَبْدُ اللهِ مَعَ أَصْحَابِهِ؟ |
| هَلْ فَرِحَ عُمَرُ بِجَوَابِهِ؟ | كَانُوْا يَلْعَبُوْنَ فِيْ الطَّرِيْقِ |
| هَلْ تَخَافُ مِنْ ضَابِطِ بُوْلِيْسٍ؟ | اِسْمُهُ عَبْدُ اللهِ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# التِّلْمِيذُ الْمُؤَدَّبُ

حَسَّانٌ تِلْمِيذٌ مُؤَدَّبٌ، لَا يَنْطِقُ بِكَلِمَةٍ بَذِيئَةٍ، وَلَا يُؤْذِيْ أَحَدًا فِيْ الْبَيْتِ أَوِ الْمَدْرَسَةِ، وَإِذَا دَخَلَ الْمَنْزِلَ وَوَجَدَ ضُيُوْفًا سَلَّمَ عَلَيْهِمْ وَصَافَحَهُمْ وَلَا يَجْلِسُ مَعَهُمْ إِلَّا إِذَا أَمَرَهُ أَبُوهُ بِالْجُلُوْسِ، وَإِذَا طَلَبَ شَيْئًا مِنْ وَالِدِهِ أَوْ وَالِدَتِهِ تَكَلَّمَ بِأَدَبٍ وَاحْتِرَامٍ وَإِذَا أَخَذَ شَيْئًا مِنْ أَحَدٍ قَالَ لَهُ: جَزَاكَ اللهُ.

وَهُوَ نَظِيْفُ الْمَلَابِسِ وَالْجِسْمِ، وَأَظْفَارُهُ قَصِيرَةٌ، وَأَدَوَاتُهُ مُرَتَّبَةٌ وَنَظِيْفَةٌ، لِذَلِكَ يُحِبُّهُ وَالِدُهُ وَإِخْوَتُهُ كَمَا يُحِبُّهُ كُلُّ مَنْ يَعْرِفُهُ وَيَقُوْلُ النَّاسُ عَنْهُ: إِنَّهُ تِلْمِيْذٌ مُؤَدَّبٌ.

ஹஸ்ஸான் ஒழுக்கமுள்ள ஒரு மாணவன். எந்தவொரு மோசமான வார்த்தையை பேசவோ, வீட்டில் அல்லது பாடசாலையில் யாருக்கும் தொந்தரவு செய்யவோ மாட்டான். அவன் வீட்டில் நுழையும்போது விருந்தினரைக் கண்டால் ஸலாம் சொல்லி அவர்களுடன் கைலாகு செய்வான். அவர்களுடன் அமர்ந்து கொள்ளுமாறு அவனது தந்தை சொன்னால் மட்டுமே அவ்விருந்தினருடன் அமர்ந்து கொள்வான். ஹஸ்ஸான் தாய், தந்தையிடமிருந்து எதையாவது கேட்டுப் பெறும்போது பண்பாடாகவும் மரியாதையாகவும் பேசுவான். யாரிடமிருந்தாவது ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டால் ஜஸாக்கல்லாஹு ஹைரன் ''உங்களுக்கு அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக'' எனப் பதில் சொல்வான்.

ஹஸ்ஸான் தனது உடலையும் உடைகளையும் சுத்தமாக வைத்திருக்கின்றான். அவனது நகங்கள் கட்டையாக இருக்கும். அவனது பொருட்கள் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் இருக்கும். இதனால் ஹஸ்ஸானைத் தெரிந்தவர்கள் அவனை விரும்புவது போல அவனது தந்தையும் சகோதரர்களும் அவனை விரும்புகின்றனர். மற்றையவர்கள் அவன் ஒரு பண்பாடுள்ள மாணவன் என்றே பேசிக் கொள்கின்றனர்.

## இணைக்குக

| اَلْأَسْئِلَةُ | اَلْأَجْوِبَةُ |
|---|---|
| هَلْ حَسَّانٌ وَلَدٌ مُؤَدَّبٌ؟ | أُعَامِلُهُمْ بِاحْتِرَامٍ |
| مَاذَا تَفْعَلُ إِذَا وَجَدْتَ ضُيُوْفًا؟ | أُعَامِلُهُمْ بِالرَّحْمَةِ |
| كَيْفَ تُكَلِّمُ أَبَاكَ وَأُمَّكَ؟ | أَدَوَاتِي نَظِيْفَةٌ |
| كَيْفَ مَلَابِسُكَ؟ | أُكَلِّمُ أَبِيْ وَأُمِّيْ بِأَدَبٍ |
| كَيْفَ أَدَوَاتُكَ؟ | إِذَا وَجَدْتُ ضُيُوْفًا فَأُسَلِّمُ عَلَيْهِمْ |
| كَيْفَ تُعَامِلُ الصِّغَارَ؟ | نَعَمْ، هُوَ وَلَدٌ مُؤَدَّبٌ |
| كَيْفَ تُعَامِلُ الْكِبَارَ؟ | مَلَابِسِيْ نَظِيْفَةٌ |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

The most awaited month has arrived! The paradises are decorated and the devils are chained. Allah has opened his door of mercy and his blessings are being bestowed on us in abundance! So what are you waiting for? Just rush out to get the maximum out of the thirty blessed days of the holy month of Ramadhan! Allahu Akbar!




Ramadhan is indeed a special month. Hence, we ought to spend our time engaging in quality work without merely wasting it. If we just look at the benefits of fasting, Subahanallah! the list keeps on extending.

- Through fasting, a Muslim experiences hunger and thirst, and sympathizes with those in the world who have little to eat every day.
- Through increased devotion, Muslims feel closer to their Creator and recognize that everything we have in this life is a blessing from Him.
- Through increased charity, Muslims develop feelings of generosity and good will toward others. The Prophet Muhammad (peace be upon him) once said, "A man's wealth is never diminished by charity."
- Through self-control, a Muslim practices good manners, good speech, and good habits.
- Through changing routines, Muslims have a chance to establish healthier lifestyle habits -- particularly with regards to diet and smoking.
- Through family and community gatherings, Muslims strengthen the bonds of brotherhood and sisterhood, in their own communities and throughout the world.

Courtesy - https://www.thoughtco.com/benefits-of-ramadan-2004609

Indeed, fasting is an opportunity to train ourselves to stay in control. It undoubtedly enables us avoid committing sins. Hence, in this very special month let us,

❖ Engage ourselves in lot of Dhikr.

❖ Recite the holy Qura'n as many times as possible.

❖ Try understanding the Thafsirs of the different suras in the holy Qura'n.

❖ Give as much as sadaqa as we could.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Abstain ourselves from all sorts of sins, even those which are related to our minds.
- Ask for repentance from Allah (sbwt)as much as possible.
- Perform all the special prayers of the month.
- And keep ourselves busy in performing good deed in abundance.

These steps would Inshaa Allah aid one in reforming him/herself into a pious Muslim. Let's start with the procedure on the very first day itself. Have a happy Ramadhan! Barakallah!

## Hadith of the month

The Prophet (Sal) said, "There is a gate in Paradise called Ar-Raiyan, and those who observe fasts will enter through it on the Day of Resurrection and none except them will enter through it. It will be said, 'Where are those who used to observe fasts?' They will get up, and none except them will enter through it. After their entry the gate will be closed and nobody will enter through it."

## Laugh a while:

"If you give Rs.5000/= to your friend, But he needs only Rs.4000/=, how much will he return?

**Student:** "Rs. 0/="

**Teacher:** "You don't know Maths...?"

**Student:** "You don't know my friends"

# Your Corner



## Rainy days

I love rainy days because they are very fresh and cool. During rainy days I enjoy the rain drops. I make paper boats and let them sail in the water outside. But sometimes I'm scared of the thunder and lightning. When it is thundering, my mother never allows me to watch TV, so I use that time to sleep well. I love rainy days as I can hold my umbrella when walking outside.

**Safna Nisawwir**
**Pelenda Muslim Vidyalaya.**

## Best thought for our lives

1. Shakespear said: I always feel happy, you know why? Because I never expect anything from anyone. Expectation always hurts. Life is short, so love your life. Be happy and keep smiling. Just live for yourself.
2. Hitler said: When you are in the light, everything follows you. But when you enter into the dark, even your own shadow does not follow you.
3. Abraham Lincoln said: If friendship is your weakest point then you are the strongest person in the world.
4. Napoleon said: The world suffers a lot. Not because of violence of bad people but because of the silence of good people.

**M.H. Fathima Farha**
**Islahiyya Ladies Arabic College, Puttalam**
**2nd year**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# The deer



The deer is a beautiful animal.
They are harmless and timid creatures.
They are found in large in numbers in our jungles.
They feed on grass
Most deers have white spots in their bodies.
The male deers have branched antlers on their heads.
Many species of deers are hunted for their antlers, skin and flesh.
A male deer is usually called a "Buck"
A female deer is known as "Doe"
A young deer is called "Fawn"
A group of deers is known as "herd".
Deers have long legs.
They can jump high and swim well.

I.Fathima Jeza
Grade 06
Sumaiya Ladies A.C.,
Kinniya

# My favourite bird



My favourite bird is parrot. It is green in colour. It loves to eat fruits. It can talk well. It has two beautiful wings. Its feathers are green. It has a red beak and a red necklace. It has two yellow legs. It can fly high up in the sky. I like this parrot a lot.

Fathima Naida
Grade 11
WP/MT. Pelenda Muslim Vidyalaya.

# Time

To realize the value of one year,
ask a student who failed a final exam
To realize the value of one month,
ask a mother who gave birth to a premature baby.
To realize the value of one week,
ask an editor of a weekly newspaper.
To realize the value of one minute,
ask a person who missed his train, bus or plane.
To realize the value of one second,
ask a person who survived an accident.
To realize the value of one millisecond,
ask the person who won the silver medal in the Olympics.
Time waits for no one,
Treasure every moment you have.
You will treasure it even more when
you can share it with someone special.



Waseema Ameer
Hemmathagama

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்




தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் தரமிக்க நூல்களின் தாயகமான இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனம் புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்நோக்கி காத்திருக்கும் மாணவர்களின் தேவையை கருத்திற்கொண்டு அருமையான நூலொன்றை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனத்தின் ஏனைய வெளியீடுகளைகளப் போலவே இந்த நூலும் தரத்திலும் வடிவமைப்பிலும் சிறந்து வழங்குவதுடன் ஆளுமையும் அனுபவமும் கொண்ட ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளது.

"முல்லை மொட்டுக்கள்" புலமைப்பரிசில் பரீட்சைக்கான இன்னொரு அறிவுக் களஞ்சியம்தான் பிரபல ஆசான் கணித, விவேக மற்றும் பூங்கா புகழ் ஸபான் (B.A) அவர்களினால் தாயாரிக்கப்பட்ட 12 வினா கொத்துகளையும் அவற்றிற்கான இன்னொரு விடை தொகுதியையும் உள்ளடக்கியதாக இந்த அருமையான நூல் அமைந்துள்ளது.

மாணவர்கள் தமது நேரத்திற்கு ஏற்ற வகையில் பிரித்து பிரித்து படிக்கும் வகையில் தனித்தனி தொகுதியாகவும் அவற்றிற்கு ஏற்ற நேர்த்தியான நிறங்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்நூல் நிச்சயம் மாணவர்களுக்கு மிகப்பெரும் உறுதுணையாக அமையும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

மாணவர்களை சுவாரஷ்யமாக கற்க தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த நூல் அதிகமான விளக்கப்படங்களையும் உள்ளடக்கியிருப்பது அதன் சிறப்பம்சமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு**

இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0112669191**

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்
2. நபில் முத்லக்
3. அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
4. பரிசுத்தமானவர்
5. மாதுளம் பழம்
6. சூரத்துல் நம்ல்
7. அப்துல்லாஹ் பின் உபைபின் ஸலூன்
8. முதலாம் ஆண்டில்
9. பனூஸஆத் குலம்
10. ஹிஜ்ரி 6 இல்
11. 4800
12. ஈபத்
13. அல் அமீன்
14. மதீனா நகரத்தில்

**பொது அறிவு**

1. கப்பறகந்த நதி
2. 1980 இலிருந்து
3. கொஸ்மாவோ
4. முல்லா முஹம்மத் உமர்
5. 300
6. பங்களாதேஷ் தேசியக் கட்சி

## எண்ணங்களின் வண்ணங்கள் - 23

**தலைப்பு: நோன்புப் பெருநாள்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஜூலை 15**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 19


## பிரித்தானியர் காலப் பிரிவில் முஸ்லிம்கள் iii

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

1818 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு வழங்கிய ஆதரவு பிரித்தானியர் மீதான நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக அமைந்தது எனக் கொள்வதற்கில்லை. அக்கால வரலாற்றுச் சூழலையும் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார நிலைகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது தவிர்க்க முடியாத நிர்ப்பந்த நிலை பிரித்தானியருக்கு சார்பாக நடக்கத் தூண்டியது எனக் கொள்வதே பொருத்தமாக உள்ளது. முஸ்லிம்கள் தமது சகல வணிக நடவடிக்கைகளுக்கும் பிரித்தானியரின் தயவை வேண்டி நிற்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். கண்டி அரசின் வீழ்ச்சி அவர்களது சமூக, பொருளாதார வாழ்வில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியது. அதுவரை கண்டி மன்னர்களின் கீழ் அவர்களது மாகாணப் பிரிதிநிதிகளாக இருந்த திசாவைகளின் கீழ், சிங்கள கிராம மக்களைப் போன்றே வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் மீது பிரித்தானியர் திணித்த வரிக்கொள்கை சிங்கள மக்களை விட்டும் அவர்களைத் தூரமாக்கியது. 1818 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி பிரித்தானிய ஆட்சியாளர்கள் விடுத்த பிரகடனம் இதனை தெளிவாகக் காட்டுகின்றது.

1818 மார்ச் பிரகடனம் முஸ்லிம்களுக்கு பொறுப்பாக இருந்த சிங்கள திசாவைகளிடம் இருந்து அவர்களைப் பிரித்தது. அதுவரை அவர்களது பரிபாலனத்தின் கீழ் இருந்த முஸ்லிம்கள் பிரித்தானிய அதிகாரிகளின் பரிபாலனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். முஸ்லிம்களுடன் தொடர்பான சகல வழக்குகளும் பிணக்குகளும் பிரித்தானிய அதிகாரிகளினாலேயே விசாரிக்கப்பட வேண்டும் என இப்பிரகடனம் குறிப்பிட்டது. அத்தோடு, 1818 கலவரத்தின்போது பிரித்தானியருக்கு ஆதரவாக செயற்பட்டு உயிர்களையும் உடைமைகளையும் இழந்த முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் இப்பிரகடனம் குறிப்பிட்டது.

கண்டி கலவரத்தின்போது முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு ஆதரவாக செயற்பட்டதால் ஆத்திரமடைந்த கண்டி பிரதானிகள் முஸ்லிம்களின் வணிகப் பொருட்களை அபகரித்தனர். அதற்கு எவ்விதக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. இதனை பிரித்தானியரிடம் முறையிட்டதன் காரணமாக முஸ்லிம்களுக்கென்று தனியான வரி அறவிடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹாந்திரம் ஒருவர் நியமிக்கப்பட்டார். 1818 ஆம் ஆண்டு உஸ்மான் லெப்பே மரிக்கார் என்பவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். பிரித்தானியரின் திட்டமிட்ட இந்நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே நிலவிய உறவைப் பாதித்தது.

முஸ்லிம்களின் நிர்க்கதிநிலையைப் பயன்படுத்தி அவர்களுக்கு சில சலுகைகளை வழங்கி அவர்களுக்கு உதவுவதுபோல பிரித்தானியர் நடந்து கொண்டமை பல நூற்றாண்டு காலங்களாக நிலவிய சிங்கள-முஸ்லிம் நல்லுறவில் ஆழ்ந்த தாக்கத்தையும் விரிசலையும் ஏற்படுத்தியது. சிங்கள-முஸ்லிம் சமூகங்கள் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையை இழக்கச் செய்தது.

1833 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு இலங்கையின் சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு வாழ்வில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. 1815 முதல் பிரித்தானிய ஆளுநர்கள் இலங்கையின் ஆட்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான வருமானத்தை முழுமையாக இங்கிருந்தே ஈட்டிக் கொள்வதில் தோல்வி அடைந்தனர். அவர்கள் இலங்கையின் நிர்வாக செலவினங்களுக்கான நிதியை பிரித்தானிய அரசிடம் இருந்தே பெற்று வந்தனர். குடியேற்ற நாடு ஒன்றின் தேவையை நிறைவேற்ற இவ்வாறு நிதி வழங்குவதை பிரித்தானிய



அரசு விரும்பவில்லை. எனவே, இந்நாட்டின் அரசியல், பொருளாதார செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றைப் பெற வேண்டிய தேவை பிரித்தானிய அரசுக்கு ஏற்பட்டது. இதற்காக அப்போது குடியேற்ற நாடுகளின் செயலாளராக இருந்த ரொட்ரிக் பிரடி அவர்களால் W.M.C. வில்லியம் கோல்புருக் நியமிக்கப்பட்டார். அவருக்கு துணையாக, நீதி பரிபாலன முறை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சார்ள்ஸ் கமரூன் நியமிக்கப்பட்டார். கோல்புருக் 1829 இலும் கமரன் 1830 இலும் இலங்கை வந்தனர். இவர்கள் இருவரிடமும் பின்வரும் துறைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது:

01. இலங்கையின் நிர்வாகம்

02. வரவு-செலவு

03. அரச பரிபாலனம்

04. நீதித்துறை

இத்துறைகள் பற்றி ஆராய்ந்த கோல்புருக், கமரன் அறிக்கையில் பின்வரும் முக்கிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன:

1. கரையோரப் பிரதேசத்தை மலையகத்துடன் இணைத்து ஒன்றிணைக்கப்பட்ட ஆட்சி முறைமையின் கீழ் கொண்டு வருதல். சட்டவாக்க, சட்டநிர்வாக சபைகள் உருவாக்கப்படல்.
2. நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக நாட்டை வடக்கு, கிழக்கு, மேல், மத்திய, தென் மாகாணங்கள் என ஐந்தாகப் பிரித்தல்.
3. கட்டாய அரச கரும முறைமை நீக்கப்படல்
4. அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்படல்
5. காணிகள் விற்கும் கொள்கை நடைமுறைப்படுத்தப்படல்
6. புதிய நீதிமன்ற முறைமை நடைமுறைப்படுத்தப்படல்

கோல்புருக் முன்வைத்த இவ்வாலோசனைகள் குடியேற்ற நாடு களுக்குப் பொறுப்பான செயலாளரின் அனுமதியோடு ஆளுநர் ரொபட் வில்மட் ஹோர்டன் அவர்களால் 1833 இல் நடைமுறைப்படுத்தப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நலவை கல்லில் பதி

ஒருநாள் பாத்திமா பாடசாலை விட்டு வீடு வந்து முன்னே இருக்கும் கதிரையில் களைப்பாலும் கவலையாலும் வழமைக்கு மாற்றமாக ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்து கொண்டிருப்பதை அவளுடைய தாய் கண்டாள். என்றாலும், அதனைப் பொருட்படுத்தாமல் மகளை சாப்பிடுமாறு வேண்டிக் கொண்டாள். பாத்திமா சாப்பிடாமல் பாத்திரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவளுடைய தந்தை வீடு வந்தார். வீடு வந்த தந்தையை அணைத்து ஏங்கி ஏங்கி அழத் துவங்கி விட்டாள். மகளின் அழுகையை நிறுத்தி தந்தை காரணத்தைக் கேட்டார். அவள் விம்மலுடன் தந்தையிடம் காரணத்தை கூறத் தொடங்கினாள்.


''இன்று எனது உற்ற நண்பி மர்யம் வழமைக்கு மாற்றமாக எனது மனசு நோகும்படி ஏசிவிட்டு என்னிடம் பேச வேண்டாம் என்று கூறி விட்டாள். அவள் எனது கன்னத்தில் ஓங்கி அறைந்து இருந்தாலும் தாங்கிக் கொண்டு இருப்பேன்'' என்று கூறி அழுதாள். தந்தைக்கு மகளின் அழுகையை நிறுத்த என்ன செய்வதென்று விளங்கவில்லை. திடீரென்று ஒரு கதை நினைவுக்கு வந்தது.

மகளின் கவலையைப் போக்க, அவளை ஆறுதல்படுத்த தந்தை ஓர் உண்மைக் கதையை கூற ஆரம்பித்தார்.

''அஹ்மதும் முஹம்மதும் இணை பிரியாத நண்பர்கள். அவர்கள் இருவரும் சுகதுக்கத்தில் பங்கு கொள்ளும் உற்ற நண்பர்களாய்த் திகழ்ந்தனர். ஒரு நாள் அஹ்மதின் வீட்டில் ஏதோ மனைவியுடன் வாய்த்தர்க்கம் காரணத்தால் மனம் உடைந்து நண்பனை சந்திக்க வந்தான். நண்பர்கள் இருவரும் கடற்கரைக்குச் சென்று உல்லாசமாக கதைத்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள். திடீரென்று இருவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. வீட்டுக் கவலை காரணத்தால் அஹ்மத் முஹம்மதை கடுமையாக ஏசி விட்டு 'பளார்' என கன்னத்தில் அறைந்து விட்டு ''இனிமேல் என் முகத்தில் முழிக்காதே'' என்று கூறி விட்டான்.

இவ்வளவு நடந்தும் முஹம்மத் ஒன்றும் பேசாமல் கடற்கரை மண்ணில் ''இன்று எனது நண்பன் என்னை அடித்து விட்டான்'' என்று எழுதினான். பின்பு கடல் நீரைப் பருகி விட்டு கடலுக்கு நீந்தச் சென்றான். திடீரென்று கடல் அலை முஹம்மதை இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. இதை பார்த்துக் கொண்டிருந்த அஹ்மத் அனைத்தையும் மறந்து விட்டு தனது இணை பிரியாத நண்பனை காப்பாற்ற ஓடினான். கடும் கஷ்டத்திற்கு மத்தியில் தனது நண்பனை காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்து சேர்த்தான்.

முஹம்மத் அஹ்மதைப் பார்த்து புன்னகைத்து விட்டு அருகே உள்ள கல்லில் ''இன்று எனது நண்பன் என் உயிரையே காப்பாற்றி விட்டான்'' என்று பதித்தான். இதனைப் பார்த்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹ்மதின் கண்கள் கலங்கின. தனது இணை பிரியா நண்பனை அள்ளி அணைத்துக் கொண்டு பணிவான மன்னிப்பை வேண்டினான். பின்பு பழைய நிலைக்கு இருவரும் வர அஹ்மத் முஹம்மதிடம் மண்ணில் எழுதிய காரணத்தையும் கல்லில் எழுதிய காரணத்தையும் வேண்டினான்.

முஹம்மத் கூறினான், ''ஒருவர் தனக்கு செய்ததில் நல்லவற்றை மாத்திரமே கல்லில் எழுத்துப்போல் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றான். ''நான் மண்ணில் எழுதியவுடன் சிறிது நேரத்தில் கடல் நீர் வந்து அதை தடயமில்லாமல் செய்து விட்டுச் சென்றது. அதனுடனே எனது கவலையும் சென்று விட்டது. நீ ஏசி அடித்த மறுகணம் நானும் உன்னை ஏசி அடித்திருந்தால் அவ்விடத்திலேயே எம் உறவு சிதறிச் சென்றிருக்கும் தேட முடியாத அளவிற்கு'' என்றான்.

அன்று முதல் இன்று வரை இருவரும் இணைப் பிரியா நண்பர்களாகவே இருக்கிறார்கள்'' என்று கூறி பாத்திமாவின் தந்தை கதையை முடித்து விட்டு மகளைப் பார்த்துக் கூறினார்;

''பாத்திமாவே! உனது நண்பி உனக்கு செய்ததை மன்னில் எழுதி விடு. உனது நண்பி ஏதோ ஒரு கவலையில் உன்னிடம் அப்படி நடந்து கொண்டிருக்கலாம். நாளையே அவள் உன்னிடம் மன்னப்பை வேண்டலாம். இவற்றை மனதில் போட்டு உன்னை நீயே மாய்த்துக் கொள்ளாமல் போ. போய் சாப்பிடு'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

தந்தையின் உண்மைச் சம்பவமும் அவரின் வார்த்தைகளும் பாத்திமாவிற்கு இதமாகவும் உறுதியை அளிக்கக் கூடியதாகவும் இருந்தன. மறுநாள் காலை பாத்திமா பாடசாலை செல்ல தயாரானாள். மகளிடம் தந்தை, ''மகளே! நான் கூறிய உண்மைச் சம்பவம் எனது வாழ்க்கையில் நடந்ததே. என்னை மாற்றிய சம்பவமும் அதே. அதிலுள்ள அஹ்மத் நானே. எனது அனுபவமே அந்தக் கதை'' என்று கூறினார். பாத்திமா திகைத்து நின்றாள். மகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்தார் தந்தை. பின்பு அவரும் வேலைக்கு சென்று விட்டார்.

தந்தை கூறியதுபோல் மர்யம் பாத்திமாவிடம் வந்து ''வீட்டுக் கவலை காரணமாக நேற்று உன்னை ஏசி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்'' என்று கூறினாள். பாத்திமாவிற்கு ஓடி வந்து தந்தையை முத்தமிட்டுக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. பின்பு இருவரும் பழையபடி நண்பர்களாகவே இருந்தனர். அன்று மாலை தந்தையிடம் பாடசாலையில் நடந்ததை கூறினாள். பாத்திமாவின் தந்தையும் மகிழ்ச்சியடைந்தார். பின்பு அனைவரும் இரவுணவை உண்டு விட்டு தூங்கச் சென்றார்கள். பாத்திமா தூங்கும் முன் பிரார்த்தனை செய்தாள். தனது நண்பிக்கும் ஒரு பங்கை ஒதுக்கி துஆ செய்து விட்டு நாளை நண்பியைப் பார்க்கும் சந்தோஷத்தில் கண்ணயர்ந்து தூங்கினாள்.

✍ ருக்பீனா ஸித்தீக்
அல் மு∴மினாத் பெ.அ.க.
குருகொட, அக்குரணை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோதனை கண்டு வேதனையில் வீழ்ந்து விம்மி அழுபவனை விட அவற்றிலிருந்து கற்ற போதனைகளால் சாதனைகள் படைப்பவனையே உலகம் கொண்டாடுகிறது. வாழ்க்கையில் எமக்கு வரும் சோதனைகளையும் துன்பங்களையும் கண்டு இருட்டு மூலையில் உட்கார்ந்து விம்மியழாமல் அவற்றை வெற்றி கொள்ளப் போராடும்போது நாமும் சாதனையாளர்களாகின்றோம்.

அவ்வாறான ஒரு கதாநாயகன்தான் மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் இளஞ் சாதனையாளர் எம்.எஸ். எம் அம்ஹர். முழு நாடும் மீதொட்டமுல்லை குப்பைச் சரிவின் கண்ணீர்த்துளிகளுக்கு மத்தியில் அல்லாடியபோது, அதற்காக அரசியல்வாதிகளை திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தபோது, மீடியாக்கள் இவற்றையல்லாம் முகப்பு செய்தியாக போட்டு விற்பனையை பெருக்கிக் கொண்டிருந்தபோது இவ்வாறான இன்னோர் அனர்த்தம் தன் தாய் நாட்டுக்கு வந்திடவே கூடாது என ஒரு பிஞ்சு மனதில் ஏற்பட்ட ஆதங்கமொன்று இன்று மாபெரும் சாதனையாக வந்து நிற்கின்றது.



# தேசத்தின் கண்ணீர்துடைக்கும் பணியில் ஒரு சாதனைச் சிறுவன்!!

**வ. முஹம்மத் நபீல்**

மாவனல்லை ஸாஹிராவின் தரம் ஆறில் கல்வி கற்றும் அம்ஹர் கண்டுபிடித்த **instant garbage shredding mechine** எனும் கழிவுப்பொருட்களை நொருக்கும் இயந்திரம் அனைவரது பாராட்டையும் அள்ளிவாரிக் கொண்டிருக்கின்றது. சாதாரண உதிரிப்பாகங்களைக் கொண்டு உன்னத நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த உபகரணம் இன்னும் சில திருத்தங்களுடன் விற்பனைக்கு வரும்போது ஒட்டுமொத்த தேசத்தையும் கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கும் குப்பை பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவனல்லை, நாக்கூருகம என்ற பிரதேசத்தைச் சேர்ந்த அம்ஹருக்கு இயல்பிலயே கண்டுபிடிப்பு துறை மீது ஓர் அடங்காப்பற்று காணப்பட்டது. அதற்கு ஏற்பவே அவரது பெற்றோரும் அவருக்கான பாதையை செப்பனிட்டுக் கொண்டிருந்தனர். தன் தந்தை வாங்கித் தந்த திருத்தல் வேலைகளுக்கான உபகரணங்களை வைத்துக் கொண்டு சதாவும் ஏதாவது ஓர் ஆய்வை மேற்கொண்டிருக்கும் அம்ஹருடைய மனதில் பேரிடியாக விழுந்தது மீதொட்டமுல்லை அனர்த்தம். முழுமையாக புதையுண்ட மக்களும் குழந்தைகளும் அவருடைய பிஞ்சு மனதை மிகவும் நோகடித்து விட்டன.

அதேசமயம், பாடசாலையில் அவருக்கு வழக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும் அதிபர் ஜவாட் அவர்களின் வழிகாட்டலுடன் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரத்தை வடிவமைக்கும் பணியில் அவர் இறங்கினார்.

**அகரம்**: இந்த இயந்திரம் எவ்வாறு இயங்குகின்றது?

**எம்.எஸ்.எம் அம்ஹர்**: தையல் இயந்திரத்தைப்போல ஒரு முறை அழுத்தி திருகினால் குப்பைகளை நறுக்கி வெளியேற்றுவதாக இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதுவும் திருத்தல் வேலைகளுக்கு உபயோகப்படும் சாதாரண பொருட்களைக் கொண்டு இந்த உபகரணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நொருக்கப்படும் கழிவுகளை பசளையாகவும் பயன்படுத்த முடியும்.

சுமார் 5-6 வீடுகளுக்கு ஓர் இயந்திரம் என்ற வகையில் பாவிக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இவ்வியந்திரத்தை செதுக்க 1800 ரூபாக்கள் மாத்திரமே செலவாகியது என்பது இங்கு கவனிக்க வேண்டிய கூடுதல் சிறப்பம்சம்.

**அகரம்**: இந்த அற்புதமான கண்டுபிடிப்புக்கு சமூகத்தில் கிடைத்த அங்கீகாரம் என்ன?

**எம்.எஸ்.எம் அம்ஹர்**: இந்த கண்டுபிடிப்பு வலய மட்டத்தில் பாடசாலைகளின் 80 கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாக போற்றப்பட்டு, இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன் நாடளாவிய ரீதியில் நடந்த சகசசக் நிமவும்-2017 எனும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் போட்டியில் பங்கேற்று அதன் பெறுபேறுகளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றது.

**அகரம்**: இந்த வெற்றித் தருணத்தில் யாருக்கல்லாம் நன்றிகூற கடமை பட்டிருக்கின்றீர்கள்?

**எம்.எஸ்.எம் அம்ஹர்**: வெற்றிக்கு துணை புரிந்ததற்கான நன்றிகளை அதிபர் ஜவாட் மற்றும் வகுப்பாசிரியர் ரிஸ்வானா, ஆசிரியர் ஸம்னி மற்றும் அருமை பெற்றோர் உட்பட அனைத்து நல்லுள்ளங்களுக்கும், எல்லாவற்றிலும் முக்கியமாக அறிவையும் அதை எந்தத் திசையில் பயன்படுத்த வேண்டும் என காட்டித்தரும் ஆற்றலையும் தனக்குத் தந்த வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்துலில்லாஹ்!

தனது அடுத்த கட்ட கண்டு பிடிப்பாக தின்மக் கழிவுகளை அகற்றும் அரிய கண்டுபிடிப்பை உருவாக்க அம்ஹரின் முயற்சிகள் படிப்படியாக நகர்ந்து கொண்டிருக்கின்றன.

தேசத்திற்கானதும் சமுகத்திற்கானதும் தலைவர்களை செதுக்குவதில் மாவனல்லை ஸாஹிரா எப்போதுமே சிறந்த ஒரு முன்மாதிரியாக இருந்து வருகின்றது. அங்கிருந்து உருவாக்கபட்ட அதிகாமானோர் இன்று பல்வேறு துறைகளில் பல சாதனைகளைப் படைத்து சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்து கொண்டிருக்கின்றனர். அந்த வரிசையில் இணைந்து கொண்டிருக்கும் நமது இளம் சாதனையார் அம்ஹருக்கு எமது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

---

சிந்தனைக் கதை

# புத்தர் சொன்ன தத்துவம்

ஒரு பெரிய பணக்காரனுடைய மகன் திடீரென இறந்து போனான். தனது மகனின் இறப்பை தாங்கிக்கொள்ள முடியாத அந்தப் பணக்காரன் வீதிக்கு வீதி அழுது ஒப்பாரி வைத்து அலைந்து கொண்டிருந்தான். இறுதியாக தனது மகனை உயிர்ப்பித்து தருமாறு புத்தரின் கால்களில் வீழ்ந்தான்.

புத்தர் எவ்வளவுதான் சாமாதானம் சொன்னாலும் அவன் அடங்குவதாக தெரியவில்லை. இறுதியாக ''மரணம் நிகழாத ஒரு வீட்டில் சிறிது கடுகு வாங்கிக் கொண்டு வா! நான் உன் மகனை உயிர்ப்பித்து தருகின்றேன்'' என சொல்லி அனுப்பினார்.

ஆனால், அவன் எந்த வீட்டுக்கு சென்றாலும் அங்கே ''எனது மகன் இறந்து விட்டான், எனது தந்தை இறந்து விட்டார்'' என்றார்களே தவிர யாரும் அவன் எதிர்பார்த்த பதிலை தரவில்லை. இறுதியில் உலகில் பிறக்கும் அனைவரும் ஒருநாள் இறக்கவே வேண்டும் என்பதை உணர்ந்த அவன் தெளிவுடன் தன் வீட்டுக்கே திரும்பிச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்பந்தாட்ட விளையாட்டின்
தலைநகரம்

# பிரேஸில் BRAZIL



ஜனாதிபதி
மைக்கல் டெமர்

காற்பந்தாட்ட தேசம் பிரேஸில். தென் அமேரிக்காவின் மிக பெரிய நிலப்பரப்பையும் அதிகமான சனத்தொகையையும் தன்னகத்தே கொண்ட வளமான நாடு பிரேசிலாகும். பிரேசிலுக்கு சொந்தமாக பெர்னான்டோ டி நோரன்கா, ரோக்காசு, அட்டோல், செயின்ட் பீட்டர் போன்ற பிரபல தீவுகளும் உண்டு.

காற்பந்தாட்டம் பிரேஸில் மக்களது உயிர் நாடியாகும். வீதிக்கு வீதி உதைப்பந்துகளுடன் எம்மைக் கடந்து செல்லும் இளைஞர்களை அங்கு தாராளமாக காணலாம். ஐந்து முறை சம்பியனாகி தங்க கோப்பையை சுவீகரித்திருக்கும் பிரேஸில் காற்பந்தாட்டத்தின் முடிசூடா மன்னனாக விளங்குகின்றது.

அதே போன்று கரப்பந்தாட்டமும் பிரேஸிலை தன் பக்கம் ஈர்த்துக்கொண்டிருக்கின்றது. கடந்த வருடம் (2016) பிரேஸிலின் ரியோ டி ஜெனீரா நகரிலேயே ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தென் அமேரிக்காவின் மிக கூடிய பரப்பளவை கொண்டிருக்கும் நாடு பிரேஸிலாகும். அதேவேளை மிக நீளமான கடற்கரையையும் கொண்டுள்ளது.

**பிரேஸில் பற்றி அபூர்வ தகவல்கள்**

- போர்த்து கீசு மொழி பேசப்படும் மிகப்பெரிய நாடு பிரேஸிலாகும்
- இங்கு ஒரு நூலை வாசித்து அது பற்றிய அறிக்கை ஒன்று தயாரித்தால் சிறைக்கைதிக்கு நான்கு நாள் சிறை தண்டனை கழிக்கப்படும்
- உலகின் மிகத்தரமான கோப்பியை உற்பத்தி செய்யும் நாடு என்ற பெருமையை பிரேஸில் 150 வருடங்கள் பாதுகாத்து வருகின்றது.
- மூன்று நேர வலயங்களை கொண்ட மிக பரந்த அளவு நாடாக அமைந்துள்ளது.

**பொருளாதாரம்**

இலத்தீன் அமேரிக்காவின் முதன்மை பொருளியல் நாடாகவும் சர்வதேச மட்டத்தில் ஏழாவது இடத்திலும் பிரேஸிலின் பொருளாதார வளம் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. சுமார் 107 மில்லியன் மக்கள் பிரேஸிலின் பொருளாதாரத்தை உயர்த்த அரும்பாடு பட்டு உழைத்துக்கொண்டிருக்கின்றனர்.

விமான உதிரிப்பாகங்கள், சோயா அவரைகள், உப்பிட்ட மாட்டிறைச்சி என்பன பிரேஸிலின் பிரதான ஏற்றுமதிகளாகும். அதேவேளை உலகத்தை வியக்க வைக்கும் விமானங்களையும் பிரேஸில் தயாரிக்கின்றது.

**தலைநகர்- பிரேஸிலியா**

**பிரதான மதம்- கத்தோலிக் கிறிஸ்தவம்**

**பிரதான இனம்- ஆங்கில இனத்தவர்**

**பரப்பளவு- 8,515,767**

**மொத்த தேசிய உற்பத்தி- 3, 217 டிரில்லியன் அமேரிக்க டொலர்**

**நாணய அலகு- றியல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்:

சிறுவர்களின் ஆற்றல்களை ஊக்குவித்தல், அவர்களது ஆற்றல்களுக்கு களம் அமைத்தல், அவர்களது சிந்தனைகளை இஸ்லாமியமயப்படுத்தல், மாணவர்களது பாடசாலைக் கற்றலுக்கு மேலதிக உள்ளீடுகளை வழங்குதல், புதிய புதிய தகவல்களை வழங்குவதன் ஊடாக மாணவ வாசகர்களை வலுவூட்டுதல், 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழிகாட்டலை வழங்குதல் முதலான இலக்குகளைக் கொண்டதாக அகரம் மாணவர் சஞ்சிகை 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது.

## சந்தா விண்ணப்பப் படிவம்

### JUST MEDIA FOUNDATION

Subscription Form

Receipt No:

Date:

Name: ..........................................

Address: ..........................................

..........................................

Tel: ........................ Mob: ........................

E-mail: ..........................................

Profession: ..........................................

**PAYMENT DETAILS**

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு **MONEY ORDER** எடுத்து தபாலகம் **DEMATAGODA** என குறிப்பிட்டு அனுப்பவும்.

வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Just Media Foundation, A/C NO: 79088651, Bank of Ceylon, MARADANA.** எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை **77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324 | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

எமது வெளியீடுகளில்
விளம்பரம் செய்து
நீங்களும் எமது
சேவையில்
பங்குதாரர்
ஆகலாம்...




# ADVERTISEMENT TARIFF

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | (10" X 7") | 60,000.00 | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | (10" X 7") | 40,000.00 | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| INNER PAGES | | | | | | | | | | |
| FULL | (9.4" X 7") | 20,000.00 | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | (4.7" X 7") | 10,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | (4.7" X 3.5") | 6,000.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | (2" X 3.5") | 3,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | (2" X 7") | 4,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

தொடர்புகளுக்கு:

0778942217 ☎ 0112689324

**JUST MEDIA FOUNDATION**

**No 77, Sri Vajiragnana Mawatha, Colombo-09**

JUST MEDIA FOUNDATION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்க்காக....

■ ஹிந்தியில் : ரஞ்சன் ஸக்ஸைனா
தமிழில் : ஸீயெம்மே அமீன்

பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்குமிடையே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெருந்தொகையான ஆங்கில வீரர்கள் கைது செய்யப்பட்டு பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டனர். அங்கே சிறைகளில் கடுமையான கண்காணிப்புக்கு உள்ளாயினர். பிரான்ஸ், ஆங்கிலேய கைதிகளைத் துரோகிகளாகக் கருதியது. துரோகிகளுக்கு ஒன்றில் மரண தண்டனை கிடைக்கும் அல்லது ஆயுட்காலச் சிறை.

அப்போது நெப்போலியன் பிரான்ஸின் சக்கரவர்த்தியாக இருந்தான். ஒருநாள் ஆங்கிலேயக் கைதியொருவன் அரச சபையில் ஆஜர் செய்யப்பட்டான். அவன் மீது கடுமையான குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஒருநாள் அவன் சிறையிலிருந்து தப்பியோடினான். அவன் காய்ந்த மரக்கட்டையின் உதவியோடு கடலைத் தாண்ட முயன்றான். எனினும், பிடிபட்டு விட்டான். அவனுடைய கையில் ஒரு பொட்டலமும் இருந்தது.

''நாம் உம்முடைய பொட்டலத்தைத் திறந்து பார்க்க விரும்புகிறோம்'' என்று நெப்போலியன் அவனிடம் சொன்னான்.

எவ்வளவோ சொல்லியும் கைதி பொட்டலத்தை அவிழ்க்கவில்லை. சேனாதிபதி அவனுடைய கையில் இருந்து பொட்டலத்தைப் பறித்தெடுத்தான். அதைத் திறந்தபோது அதனுள்ளிருந்து காய்ந்த அப்பிள் பழங்கள் நான்கு நிலத்தில் விழுந்தன.

''இது என்ன?'' என்று நெப்போலியன் கேட்டான்.

''தாய்க்காக எடுத்துச் சென்றேன்'' என்று அவன் மெதுவாக ஆனால் திடமான தொனியிலே சொன்னான்.

தாய் என்று சொல்லக் கேட்டதும் நெப்போலியனுக்குத் தனது அன்புத் தாயின் ஞாபகம் வந்தது.

''நீ சிறையிலிருந்து ஏன் தப்பிச் சென்றாய்?'' என்று நெப்போலியன் கேட்டான்.

''தாயைப் பார்ப்பதற்காக...''

''நீ உன்னுடைய தாயை மிகவும் விரும்புகின்றாயா?'' என்று நெப்போலியன் கேட்டான்.

கைதி சொன்னான்; ''இது வெறுமனே பேசுவதற்கு உரியதல்ல, செய்வதற்குரியது.''


''நான் உன்னுடைய சுய அனுபவங்களைக் கேட்க விரும்புகிறேன். சொல்வாயா?'' என்று நெப்போலியன் மீண்டும் வினவினான்.

கைதி சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பின்னர் பேசத் தொடங்கினான். ''குழந்தைப் பருவத்திலிருந்தே நான் தாயை அம்மாவாகவும் அப்பாவாகவும் பார்த்திருக்கிறேன். நான் பிறந்து சிறிது காலத்திற்குள்ளாகவே எனது தந்தை காலமாகி விட்டார். தாயார் என்னைச் சிறந்ததொரு பிரஜையாகவும் தாய்நாட்டின் உண்மையான ஒரு சேவகனாகவும் ஆக்க விரும்பியிருந்தார். எனவே, எனது கல்வி பூர்த்தியடைந்த பின்னர் அவர் இராணுவ வீரனாகும்படி எனக்கு ஆலோசனை கூறினார்.

(35 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 21


## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

**பாடம் - 15**

# Ransomware
## ரன்சம்வெயார்

கணினி நச்சு நிரல்கள் கணினிகளின் செயற்பாடு களை ஸ்தம்பிதம் அடையச் செய்பவை, அவற்றின் இயல்பான நிலையினை குழப்பக் கூடியவை என அறிந்திருப்போம். ஆனால், இன்று கணினி நச்சு நிரல்கள் உலகின் தொழில்நுட்ப இரகசியங்களைக் களவாடி, பதுக்கிவைத்து பகல் கொள்ளை அடிக்கும் சர்வதேச குற்றவியல் செயற்பாடாக மாற்றம் கண்டுள்ளன. எனவே, நச்சு நிரல்கள் என்றால் என்ன? அவற்றை உற்பத்தி செய்பவர்களின் நோக்கங்கள் யாவை? எவ்வாறு அவை எமது கணினிகளில் உள் வருகின்றன? மற்றும் அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வழிமுறைகள் யாவை? என்பவை பற்றியும் இன்று உலகில் பரவலாகப் பேசப்படும் ரன்சம்வெயார் (Ransomware) நச்சுநிரல் பற்றியும் இப்பாடத்தில் அறிந்து கொள்வோம்.



**கணினி நச்சுநிரல்**

கணினி நச்சுநிரல் (computer virus) என்பது பொதுவாக கணினி வைரஸ் என அழைக்கப்படுகின்றது. கணினியின் சேமிப்பகத்தை பயனரின் அனுமதியின்றி தானாகவே நகலெடுக்கும், கணினியின் நிரல்களையும் கோப்புக்களையும் பாதிக்கச் செய்யும் நிரல்களே நச்சுநிரல்கள் எனப்படுகின்றன. கணினிகளில் நுழைந்து அவற்றின் இரகசியத் தன்மைக்கு உலைவைக்கவென திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட நிரல்களே இவையாகும்.

கணினி நச்சுநிரல்கள் கணினியில் உள் நுழைவதற்கு ஏதுவான காரணிகளை பின்வருமாறு அடையாளப் படுத்தலாம்:

*01.* இணையம் (Internert)

*02.* கணினி வலையமைப்பு (Computer Network)

*03.* காவிச் செல்லக்கூடிய சேமிப்பு ஊடகங்கள் (Removable Hard disk, Flash drive, memory cards)

கணினிகள் இணையத்துடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கின்ற போது இணையத்திலிருந்து நச்சு நிரல்கள் கணினியைத் தாக்குவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. தேவையற்ற இணையப் பக்கங்களைப் பார்வையிடுகின்றபோது வருகின்ற தகவல் பெட்டிகளை (Message box) சொடுக்குவதன் மூலமும் அறிமுகமில்லாதவர்கள் அனுப்பிய மின்னஞ்சல்களில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள இணைப்புக்களை (Attachment) தரவிறக்கம் (Download) செய்யும்போதும் தகவல்களைப் பகிர்கின்றபோதும் நச்சுநிரல்கள் கணினியில் புகுந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதேபோன்று, அகக்கணினி வலையமைப்புக் களுடன் இணைக்கப்பட்டுள்ளபோது ஒரு கணினியில் நச்சுநிரல்களின் தாக்கம் அடுத்த கணினிகளிலும் அதன் பரவலுக்கு காரணமாக அமைகின்றது. மேலும், காவிச் செல்லக் கூடிய சாதனங்களின் மூலமாகவும் கணினி வைரஸ்கள் இடத்திற்கிடம் கொண்டு செல்லப்பட்டு கணினி நிரல்களில் புகுந்து விடுகின்றன.

**கணினி வைரஸ்களின் பணிகள்**

கணினி வைரஸ்கள் பல்வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றன. கணினிப் புழுக்கள் (Computer worm), நல்ல நிரல்கள்போல் நடிக்கும் வைரஸ்கள் (Trojan horse) என்ற வரிசையில் ரன்சம்வெயர் (Ransumware) என்பதும் தற்போது இணைந்து கொண்டுள்ளது. அதேநேரம், ஒவ்வொரு வைரஸும் வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு கணினியின் செயற்பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்கின்றது. மேலும், சில வைரஸ்கள் கணினிகளில் தங்கி பயனர் கணினியில் செய்யும் வேலைகளைக் கவனித்து வருகின்றன. பயனர் எப்போதாவது கடன் அட்டை இலக்கங்களை பதிவிடும்போதும், இணைய வங்கியத்தில் பயன்படுத்தும்போதும் கடவுச்சீட்டு களைச் சொற்களைக் குறிப்பெடுத்து அதன் உரிமை யாளருக்கு அனுப்பி விடுகின்றன.

பொதுவாக, கணினி வைரஸ்கள் கோப்புக்களை அழித்தல், கோப்புக்களின் குணாதிசயங்களை மாற்றுதல் குறிப்பாக, சிஸ்டம் கோப்பாகவோ, மறைக்கப்பட்ட கோப்பாகவோ மாற்றுதல் போன்ற பணிகளை கச்சிதமாக செய்ய வல்லவை. இவை கணினியின் நினைவகத்தை பயன்படுத்துவதால் பயனர் இயல்பாகப் பயன்படுத்தும் நிரல்களுடன் குழப்பத்தை உண்டுபண்ணி கணினியை நிலை குலையச் செய்துவிடும். மேலும், வைரஸ்கள் தன்னைத்தானே நகலெடுத்துப் பெருக்கிக் கொள்ளும். அதேநேரம், ஒவ்வொரு நாளும் 6 புதிய நச்சுநிரல்கள் கண்டறியப்படுகின்றன.

**ரன்சம்வெயார் (Ransomware)**

ரன்சம்வெயர் என்பது யாது? கணினி, டெப் மற்றும் போன்களில் உள்ள பெறுமதி மிக்க ஆவணங்களை பூட்டிவிடும் (Lock) ஒரு மென் பொருளாகும். மேலும், அவற்றைத் திறப்பதற்காக பணத்தைப் பெற்றுக் கொள்ள கோரிக்கைகளை முன்வைக்கும்.

எங்கிருந்து உருவானது? அமெரிக்காவில், 2005 ஆம் ஆண்டு இது பற்றிய முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. பின்னர் உலகம் முழுவதும் பரந்து விட்டது.

**Ransomware எவ்வாறு ஒரு கணினியைப் பாதிக்கும்?**

இந்த வைரஸ் மின்னஞ்சலுடன் வரும் ஒரு Attachment உடன் இணைக்கப்பட்டிருக்கும். அது திறக்கப்படும்போது தகவல்கள் அனைத்தும் குறியாக்கம் (encrypts) செய்யப்பட்டு விடும். அப்போது பயனரால் எதுவித தகவலையும் பெற்றுக் கொள்ள முடியாமல் போய்விடும்.

உங்களை இதிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள முடியும்?

கணினியில் பயன்படுத்தப்படும் என்டிவைரஸ் மென்பொருள்கள் இதிலிருந்து உங்களைப் பாது காக்கும். அதேநேரம், தேவையற்ற பொத்தான்கள், விளம்பரங்கள் என்பவற்றை சொடுக்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் எவ்வளவு பணத்தை எதிர்பார்க் கின்றார்கள்?

தரவுகளின் கனதிக்கு ஏற்ப அவர்கள் விலையை நிர்ணயிக்கின்றார்கள். 300 டொலரிலிருந்து கப்ப மாகப் பெற்றுள்ளனர். இவர்கள் பணத்தைப் பெற்று மீண்டும் தகவல்களை தருவார்களா என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை.

எனவே, எமது கணினித் தகவல்களை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். என்டி வைரஸ் மென்பொருள்களைப் பாவிப்பதன் ஊடாகவும் தேவையற்ற லிங்குகளை சொடுக்காமல் இருப் பதனாலும் தேவையற்ற பக்கங்களை தரிசிக்காமல் இருப்பதனாலும் வெளியிலிருந்து கொண்டு வரும் சேமிப்பு ஊடகங்களை வைரஸைப் பரீட்சித்து பயன்படுத்துவதனாலும் எமது கணினிகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ச்சி...

# புத்தாக்க சிந்தனை...

*ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

அந்த புத்தாக்க ரீதியான, புதுமையான யோசனைகளைச் சுருக்கி சிறிய சிறிய செயற்திட்ட முன்மொழிவுகளாக முன் வைத்தனர். ஆசிரியரின் ஒத்துழைப்பும் இருந்தது. பின்னர் இச்செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக பல பரிசுகள் கிடைக்கப் பெற்றதுடன் மாணவர்கள் தங்களுடைய புத்தாக்க சிந்தனைகளை படைப்புகளாக மாற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

எனவே, கையில் கிடைக்கும் ஒரு பொருளை வெறுமனே எமது தேவைக்காகப் பயன்படுத்திய பின்னர் குப்பைத் தொட்டியில் வீசி விட்டுச் செல்லும் பழக்கத்தை நிறுத்தி, அப்பொருளை எதிர்காலத்துக்கு ஏற்றவாறு எவ்வாறு மாற்றலாம்? மேம்படுத்தலாம்? என்ற வினாக்களைத் தொடுத்து எம்மத்தியிலும் புத்தாக்க சிந்தனைக் கலாசாரத்தை ஊக்குவிக்க முயற்சிப்போம்.

*10. கனவு காண்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.*

புத்தாக்க சிந்தனை என்பது தொடர்ச்சியாக கற்பனை செய்யும் பயற்சியை மேற்கொள்ளல் **(Imagination Training)**, அவதானிக்கும் திறன் மற்றும் கனவு காணும் திறன் என்பவற்றை செயற்படுத்தல் என்வற்றால் மேம்பாடடைகிறது. தகவல்கள் மிகை சுமையாக மாறிய, வாழ்க்கை முறை நகர மயமாக்கப்பட்ட இக்கால கட்டத்தில் இவ்வாறு கற்பனை செய்தல் என்பது எமது நாளாந்த வாழ்க்கையில் எம்மை விட்டு நழுவிப் போன ஒரு விடயமே.

நாம் அனைவரும் நாளாந்தம் எமது கையிலுள்ள பிரதான இலக்கிலேயே கவனத்தைச் செலுத்துகின்றோம். உளத் திறன் **(Mantel Powers)** அனைத்தையும் எமது வழமையான செயற்பாடுகளுக்கே **(Face Book, What's up, Twitter, SMS.... Etc** உட்பட**)** வழங்குகின்றோம். அதனால், அந்த நாள் முடிவில் மிகச் சிறந்த புத்தாக்க யோசனையாக எம்மால் கொண்டு வர முடிவதெல்லாம் **TV** அல்லது கணினியின் திரைக்கு முன்னால் ஓய்வெடுப்பதாகும்.

எனவே, நீங்கள் என்னதான் செய்தாலும் அது வேலையாக இருக்கலாம் அல்லது பொழுதுபோக்காக இருக்கலாம் மேலே சொல்லப்பட்ட "ஆல்" என்று முடிவடையும் 3 வினாக்களையும் வினவிக் கொள்ளுங்கள். அது உங்களுடைய உள்ளத்தைக் கனவு காண்பதற்குத் தேவையான நேரத்தைப் பெற்றுக் கொள்ளும் பழக்கத்துக்கு இட்டுச் செல்லும். கனவு என்பது எமது கற்பனையைக் குறிக்கும். கனவு காண்பது புத்தாக்க, புதுமையான சிந்தனைக்கு அடிப்படையாகும்.

*11. ஒருங்கிணைந்த புத்தாக்க சிந்தனைக்கான* **(Cohesive creative thinking)** *நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள்*

புத்தாக்கம், படைப்பாற்றல் பற்றிக் கூறும் ஒவ்வொரு புத்தகமும் புத்தாக்க சிந்தனை மற்றும் புதிய கண்டுபிடிப்பு என்பவற்றுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட நேரம் ஒன்றை ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

உதாரணமாக; கூகுள் நிறுவனம் தன்னுடைய குழுவிடம் புத்தாக்க சிந்தனை அல்லது புதிய செயற்திட்டங்களுக்காக 20% நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறு கேட்கிறது.

நாம் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக நேரம் ஒதுக்க ஆயத்தம் என்றாலும் சில நேரம் அது நடப்பதில்லை. இன்னும் புதிய யோசனைகளும் கூட தோன்றுவதில்லை. இந்த ஸ்தம்பித நிலைக்கு இரு காரணங்கள் காணப்படுகின்றன. முதலாவது காரணம், நாம் கறபனை செய்தல் அல்லது கனவு காணுதல் என்பதை செயற்படுத்துவதில்லை. இரண்டாவது காரணம், நாம் ஒருங்கிணைந்த யோசனைகளில் எமது சிந்தனையைக் குவிப்பதைச் செயற்படுத்துவதில்லை அல்லது பழக்கப்படுத்திக் கொள்வதில்லை.

எனவே, புத்தாக்க சிந்தனையை மேம்படுத்துவதற்கான ஒரு விதியாக பின்வரும் விடயத்தை ஆக்கிக் கொள்ளுங்கள்: ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் அல்லது ஒரு வாரத்துக்கு ஒரு மணித்தியாலம் என்றவாறு நேரத்தை ஒதுக்கி அதில் குறிப்பிட்ட தெளிவான சில விடயங்கள் குறித்து புதுமையாகச் சிந்திப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு நபர் தான் பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் கைத்தொலைபேசி பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். இன்னும் 10 அல்லது 20 வருடங்களில் இந்த கைத்தொலைபேசிகள் எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கும் என்பதே அவருடைய சிந்தனை. இந்த தலைப்பில் பல கட்டுரைகள் எழுதி பாடசாலை மட்டத்தில் பல பரிசில்களையும் பெற்றிருந்தார்.

பிற்காலத்தில் அவருக்கு ஒரு தொழில் கிடைத்தது. அது கைத்தொலைபேசிகளை சிறந்ததாகவும் இன்னும் ஆயிரம் வருடங்களுக்கு கவர்ச்சியான தாகவும் மாற்றக் கூடிய அப்லிகேஷன்களை **(Mobile Application)** உருவாக்கும் தொழிலாகும்.

எனவே, எமது புத்தாக்க சிந்தனையை மேம்படுத்த வேண்டுமென்றால், குறிப்பிட்ட, மிகத் தெளிவான விடயத்தைப் பற்றி குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிப் புதுமையாக, வித்தியாசமாகச் சிந்திக்க வேண்டும்.

12. உங்களுடைய சிந்தனைகளை முன்னிறுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

புத்தாக்கம் தொடர்பாகச் சிந்திக்கின்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மை இருக்கிறது. அதாவது, பிரபல அப்பிள் கம்பனியின் நிறுவனர் ஸ்டீவ் ஜொப்ஸ், இருக்கும் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தி (மடிக்கணினிகள் - **Laptops**, கைத்தொலைபேசிகள் - **Cell phones, Music Players)** புதுமையான கண்டுபிடிப்புகள் பற்றி, புதிய படைப்புகள் பற்றி விளக்குவதில் உன்னதமானவராக இருந்தார். இவை அவருடைய சொந்தப் படைப்புகள் அல்ல. ஆனாலும், அந்த உற்பத்திகளை அவர் புதுமைகளை உட்படுத்தி மேன்மைப்படுத்தினார். அத்தோடு, தன்னுடைய புதிய படைப்பு அல்லது கண்டுபிடிப்பானது சந்தையில் காணப்படும் அதே மாதிரியான ஏனைய பொருட்களை விட மேன்மையானது என்பதைத் தெளிவுபடுத்துவதிலும் உன்னதமானவராக இருந்தார்.

"என்னிடம் அந்த சிந்தனை, யோசனை இருந்தது. ஆனாலும்...", "அதே மாதிரியான சில விடயங்களை சமீப காலத்துக்கு முன்னர் முன்வைத்தேன். ஆனாலும், யாரும் அதற்குச் செவிமடுக்கவில்லை" என்று சொல்லக் கூடிய பல சந்தர்ப்பங்களைச் சந்தித்திருக்கின்றேன். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களிடம், "உங்களிடம் ஓர் உன்னதமான யோசனை இருந்தது என்பது உண்மைதான். ஆனாலும், உங்களுடைய சிந்தனையை அடுத்தவர்களுக்குத் தெளிவாகவோ, அவர்களின் கவனத்தைக் கவரும் வகையிலோ முன்வைக்கவில்லை" என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றேன். எங்களிடம் உன்னதமான, புதுமையான சிந்தனை, யோசனை, கருத்து இருக்கின்றது என்பது முக்கியமல்ல. அவற்றை பிறர் விளங்கிக் கொள்ளும் வகையில், பிறரைக் கவர்ந்திழுக்கும் வகையில் எவ்வாறு முன்வைக்கின்றோம் என்பதே முக்கியம்.

"உங்களுடைய சிந்தனையை மூன்று வசனங்களில் முன்வைக்க முடியவில்லை எனின், உங்களிடம் ஒரு சிந்தனையே இல்லை" என்ற ஒரு முதுமொழி இருக்கிறது. கண்டுபிடிப்புத் திறன்களில், படைப்பாற்றல் திறன்களில் முக்கியமான ஒரு திறன்தான், தன்னிடமுள்ள புதிய யோசனையை சுருக்கமாகவும் தெளிவாகவும் (இரண்டு அல்லது மூன்று வசனங்களில்) முன்வைக்கும் திறனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய திறன்களைப் போலவே இவ்வாறு தெளிவாகப் பேசும் திறனும் தொடர் பயிற்சி, பழக்கப்படுத்தல்களினூடாகவே ஏற்படும்.

எனவே, புத்தாக்க சிந்தனையை மேம்படுத்தி மேலே செல்வதற்கு தமது புதிய சிந்தனைகளை முன்னிறுத்தக் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

13. ஏனையவர்களுடன் இணைந்து செயற்படல். குழுவாகப் பணியாற்றல், குழுவாக இணைந்து சிந்தித்தல், குழுக் கலந்துரையாடல் போன்ற குறிப்பிட்ட ஒரு சவாலை அல்லது பிரச்சினையை எதிர்கொள்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வுகளையும் தீர்வுகளைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் பெற்றுத் தரும். இதற்கு 6 தலைச் சிந்தனை **(Six hat Thinking)** என்ற ஒரு நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இது பற்றிப் பின்னர் தனியாக நோக்குவோம்.

14. துணிந்து செயற்படுங்கள், எந்தவொரு நிலையிலும் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியைக் கைவிடாதீர்கள் **(Take Risk & Don't Give up)**. குறித்த ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது எதிர்கொள்ளும் ஒரு சவாலைச் சமாளிப்பதற்கு நடைமுறையில் உள்ள வழிமுறைகள் எந்த விதத்திலும் பொருந்தாத ஒரு நிலையில் வித்தியாசமான, புதுமையான, முற்றிலும் வேறுபட்ட ஒரு வழிமுறையைப் பற்றிச் சிந்திப்பது சற்றுக் கடினமானதே. அந்த வழிமுறை இப்படித்தான் இருக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. அவ்வாறான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிகளைப் பற்றிச் சிந்திக்கும்போது, தடங்கல்கள் வரலாம், ஆபத்துக்கள் நேரிடலாம், ''தூக்கி வீசி விட்டு சும்மா இருப்போமா'' என்ற எண்ணங்கள் கூடத் தோன்றலாம். அந்த நேரத்தில் முயற்சியை விட்டு விடாதீர்கள், ஆபத்துக்களை எதிர்கொள்ளத் துணிந்து செயற்படுங்கள்.

தோமஸ் அல்வா எடிசன் 1000 தடவைகள் தனது முயற்சியில் தோல்வியைத் தழுவிய பின்னரே மின்குமிழைக் கண்டுபிடித்தார். 500 ஆவது தடவையில் தனது முயற்சியைக் கைவிட்டிருந்தால் மின்குமிழைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றதாகியிருக்கும்.

15. உங்களைச் சுற்றி ஆக்கத்திறன் மிக்க நபர்களை இணைத்துக் கொள்ளுங்கள். நாளாந்தம் உங்களுடைய ஆக்கத்திறன் மிக்க சிந்தனை மேம்பட அது துணை புரியும்.

16. உங்களுடைய கற்பனைகளை, களவுகளைப் பதிந்து வைத்துக் கொள்ள தனியான ஒரு டயரியைப் பயன்படுத்துங்கள் **(Keep a dream diary)**. பெரும்பாலானவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் இடம்பெற்ற மறக்க முடியாத, முக்கியமான நிகழ்வுகளையும் எந்த நாளில் என்ன வேலை செய்ய வேண்டும் என்பதையும் குறித்துக் கொள்ளவே டயரிகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், தாம் நிகழ்த்தத் துடிக்கும் சாதனைகள் குறித்து, புதுமையான படைப்புகள் குறித்து நாளாந்தம் அவ்வப்போது மனத்திரையில் ஏற்படும் கற்பனைகள், கனவுகள், காட்சிகள் குறித்து எழுதிக் கொள்ளும் வீதம் மிகக் குறைவே.

எனவே, நீங்கள் அவ்வாறான கனவுகளையும் காட்சிகளையும் பதிந்து கொள்வதற்கென ஒரு தனியான டயரியைப் பயன்படுத்துங்கள். உங்களுடைய புத்தாக்க சிந்தனைக்கு அது மிக உறுதுணையாக அமையலாம்.

17. புதிய இடங்களைப் பார்வையிடச் செல்லுங்கள். பள்ளி மாணவர்களின் பாடப்புறச் செயற்பாட்டு விருத்திக்கென பாடசாலைகளில் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக; இல்ல விளையாட்டுப் போட்டி, சுற்றுலா செல்லுதல், கண்காட்சி நடத்துதல்..

பாடசாலை மாணவர்களைச் சுற்றுலா கூட்டிச் செல்வதன் பிரதான நோக்கம், அவர்கள் பல்வேறு இடங்களையும் காட்சிகளையும் பார்வையிடுவதன் மூலம் அவர்களுடைய புத்தாக்க சிந்தனையை மேம்படுத்தத் தூண்டுவதே என நான் கருதுகின்றேன். சுற்றுலாக்களில் அவர்கள் மனதுக்கு இதமான காட்சிகளைக் காண்கின்ற அதேவேளை, தொழிற்சாலைகள், அருங்காட்சிசாலை, தொழிநுட்பவியல் கண்டுபிடிப்புகள் என பல்வேறு அம்சங்களை அவர்கள் பார்க்க நேரிடுகின்றனர். இவற்றைப் பார்த்து இரசித்து விட்டு, ''நன்றாக இருக்கின்றது, வியப்பாக இருக்கின்றது'' என்று கூறுவதுடன் நிறுத்தி விடாமல் அதிலுள்ள புதுமையான அம்சங்கள் என்ன, அவற்றை மேலும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்ற ஆக்கச் சிந்தனையின் ஆரம்பப் புள்ளியாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

இவை தவிர, ஆக்கச் சிந்தனையை மேம்படுத்தும் இன்னும் மிக முக்கியமான சில நுட்பங்கள் உள்ளன. உதாரணமாக...

1. காட்சி சிந்தனை
2. மன வரைவு
3. கதிரியக்க சிந்தனை
4. பெட்டிக்கு வெளியில் சிந்தித்தல்
5. 6 தலைச் சிந்தனை

இவை பற்றிய தெளிவான விரிவான விளங்கங்களுடன் அடுத்தடுத்து வரும் அகரம் வழியே சந்திப்போம், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்க்காக...

29 ஆம் பக்கத் தொடர்...

''நான் இராணுவத்தில் சேர்ந்த செய்தி கேட்டு தாயார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சிறிது காலம் கழித்து இங்கிலாந்தின் சார்பாக பிரான்ஸுடன் யுத்தம் செய்ய அனுப்பப்பட்டேன். இதனைக் கேட்ட எனது மனம் சஞ்சலமடைந்தது. தாயாரோ சுகவீனமாக இருந்தார்...'' இவ்வாறு சொல்லிக் கொண்டு வரும்போது அவன் கவலை கொண்டான். சுகவீனமுற்ற தாயாரின் முகம் முன்னால் தோற்றமளிப்பது போல!

முழு அரச சபையிலும் அமைதி நிலவிற்று. இளைஞன் தொடர்ந்து கூறினான்: ''யுத்தத்துக்குப் போகும்போது தாயார் மகிழ்ச்சியோடு எனக்குப் பிரியாவிடை அளித்தாள். ஒரு கணமாவது தாயாரை என்னால் மறக்க முடியவில்லை.''

நெப்போலியன் அக்கறையோடு கைதியின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் தொடர்ந்து சொன்னான்...

''ஜெயிலில் இருந்து தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்வதற்காக நாங்கள் கூட்டிச் செல்லப்பட்டோம். அங்கே காய்ந்துபோன ஒரு மரக்குற்றியைக் கண்டேன். நான் உட்கார்ந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அந்த மரக்குற்றியின் நடுப்பகுதியைக் கோடாரியால் குடைந்து பள்ளமாக்கினேன். சப்பையான இரு மரக்கிளைகளைக் கொண்டு இரண்டு துடுப்புகளைச் செய்து கொண்டேன். தப்பிச் செல்லும்போது ஜெயிலின் சுவருக்குப் பக்கத்திலிருந்த அப்பிள் மரத்துக்குக் கீழே நான்கு அப்பிள் பழங்கள் தென்பட்டன. தாயாருக்குப் பரிசளிப்பதற்காக அவற்றை வைத்துக் கொண்டேன். காய்ந்து போயிருந்த மரக்கட்டையைத் தோனியாக்கி கடலைத் தாண்ட நாடினேன்.''

நெப்போலியன் அந்த ஆங்கிலேயனின் கதையைக் கேட்டு எதையோ சிந்திக்கலானான். பின்னர் அவனை நோக்கி, ''நண்பரே, நீ உனது நாட்டுக்கு விசுவாசமான பிரஜையாக இருக்கிறாய். அப்படியான பிரஜைகளால்தான் தேசத்தினதும் தேச மக்களினதும் கௌரவம் அதிகரிக்கிறது. நான் உன்னை மரியாதையுடன் விடுதலை செய்கிறேன். நீ இங்கிலாந்து போய்ச் சேர்வதற்காக கப்பலொன்றில் ஏற்பாடு செய்திருக்கிறேன். போ, போய் உனது தாயைச் சந்தி'' என்றான்.

இவ்வாறு கூறியவனாகப் பழக்கூடையொன்றை அவனது கையில் கொடுத்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: ''தாய்க்காக ஒரு மகனின் அன்பளிப்பு''

**பேசும் கவிதை - இல 25**
**தரமிருந்தும் இடம்பிடிக்கத் தவறியவை**

ஆர்.எம். அஸ்ரித் முஹமட் - பொ/அல் அஸ்ஹர் ம.வி.
எப். மிர்பத் ஸுஹா - பொ/அல்அஸ்ஹர் ம.வி., கல்லலை
பக்கீஹா ரிஸாம்டீன் - அப்துல் லத்தீப் வீதி, மூதூர் 05
பாத்திமா அஸ்லம் - தி/அந்நஹார் ம.ம.வி., மூதூர் 05
ஆப்தீன் சஹானா தஸ்னீம் - கிண்ணியா 03
அஹ்லா றிஸாம்டீன் - தி/அந்நஹார் ம.ம.வி., மூதூர் 03
ஏ.ஜே.எம். றிஸாம்டீன் - பெரிய பாலம் மூதூர் 05
லரீப் மிப்தாஸ் - நத்வதுல் உலமா அ.க., மூதூர் 05
எம்.என்.எம். ரஹ்மத்துல்லாஹ் - பு/விருதோடை மு.ம.வி.,
பாத்திமா பஸாரத் - பு/விருதோடை மு.ம.வி., மதுரங்குளி
ஏ.ஆர். ஹமாஸ் அக்ரம் - முனவ்வரா க.க., அக்கரைப்பற்று
நஜ்லா நிஸார் - பு/பாத்திமா பா.ம.வி., புத்தளம்
எம். தாரிக் தல்ஹா - நத்வதுல் உலமா அ.க., மூதூர் 05
டீ.எம். யாசீர் - நத்வதுல் உலமா அ.க., மூதூர் 05
றஸ்மி ஹம்ஸீர் - மாஞ்சோலை வீதி, கிண்ணியா 03
பாத்திமா நுப்லா - பெலந்த, அகலவத்த
எப்.எம். சாபியா - தி/அந் நஹார் ம.ம.வி., மூதூர் 03

**எண்ணங்களின் வண்ணங்கள் 22**
**தரமிருந்தும் இடம்பிடிக்கத் தவறியவை**

எம்.இஸட்.எப். கஜீதா - ஸாஹிரா தே.க. ஜின்தொட்டை
எஸ்.எப். சஜானாஸ் - எருக்கலம்பிட்டி ம.ம.வி. மன்னார்
எம்.எப்.எப். அக்ஸா - எருக்கலம்பிட்டி ம.ம.வி. மன்னார்
எம்.எப்.எப். சபிய்யா - அல் அஸ்ஹர் ம.க. தெஹியங்க
எம்.ஆர்.எப். பர்ஹா - ரஹ்மானியா ம.வி. வெலிப்பன்ன
எப்.எச். தாஜுதீன் - உடபிடிய அல்ஹுஸ்னா மு.ம.வி.
எம்.டி.யூ. அதீகா - வெலம்பொட மு.ம.வி.
எம்.ஐ.எப். பஸ்னா - மாவனெல்லை
எம்.எப்.எப். சமீஹா - அல் அஸ்ஹர் ம.க. தெஹியங்க
எம்.என். நிஸ்லா இஸ்ஸத் - அல் அஸ்ஹர் ம.க தெஹியங்க
எம்.எப். ராஷிதா - அல் ஹுதா ம.வி., ரிதீகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனவுகளைத் தேடி...

கனவுகள் காய்க்கும்
இதய மரத்தின்
பிஞ்சுக் கால்
வைத்தேறியதும்...
கிளை முறிந்து
கீழே கிடக்கின்றேன்...
கனவுகளில் கூட
என் கனவுகள்
கலைந்து போவதாய்
காண்கிறேன்...
எனை எண்ணி
ஏளனமாய் நானே
சிரித்துக் கொள்கிறேன்...
நவீனத்து வலையில்
வஞ்சிக்கும் மனிதப்
பனிதங்களின்
நடமாட்டங்கள்
விழிகளை
கருக வைக்கின்றன...
மௌனங்கள் மட்டுமே
அறிந்த என் மனப் போராட்டங்களோடு
கனவுகளை தேடி
பயணிக்கின்றேன்...
தடை தாண்டிய - என்
பயணங்களை தடுத்து
நிறுத்த
கருவக்குள் உரு வைப்பவனை
தவிர
யாராலும் முடியாது

✍ தஸ்கரை ஷப்னா நிஸ்தார்



# ஆசானே!

அன்புக்கு அர்த்தம் நீர்
கல்விக்கு ஆயதம் நீர்
முன்னேற்றத்துக்கு வழிகாட்டி நீர்
வெற்றிக்கு முதற்படி நீர்
ஆசானே! ஆசானே!
என்றும் நலமுடன் வாழ்ந்திருவீர்!

✍ அரபா நபாயிஸ்
பலாந்தை மு.வி.


# வாழ்த்து..!

வாழ்க வளம் உயர்ந்து
நோன்பு என்ற பெயரைக் கொண்டு
முஸ்லிம் நெஞ்சங்களின் பசியை துறந்து
பாடி வந்த ரமழானே!
எங்கள் ஆருயிராய் முப்பது நாட்கள்
உன் ஒருயிராய் ஒரு மாதம்
என்று வலம் வருகிறாய்!
எங்கள் பசி உன் வாழ்த்துக்காய்
என்றும் நாம் காத்திருப்போம்
எம் ரமழானே!
ஆயிரம் மாதங்களை விட
கண்ணியமானவனாய்
உன்னுள் சுமக்கும்
லைலதுல் கத்ர் இரவும்
ஈமானை புதுப்பிக்கும்
பொழுதுகளும்
எம்மைச் சேரட்டும்

✍ எப். றிம்ஸா யூஸுப்
றிஷாட் பதுயுத்தீன் ம.வி.
பாலாவி



## பேசும் கவிதை - இல 26



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஜூலை 15**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் கவிதை - இல 25



## முதலிடம் பெற்ற கவிதை

### கீற்றுப் பிறையே

கண்டுபிடி
கண்டுவிடு
என்ற தத்துவத்தை
போதித்து தீன்
கமழும் ரமழானை
மலர வைக்க
வந்தாயா?
மீண்டுமொரு
வசந்தத்துக்காய்

எம்.ஐ.எப். ஹஸ்னா
ஹிந்தகொள்ள,
ஹொரம்பாவ

### ரமழான் கீற்றே...

சாந்தி சமாதான நிலவே
நன்மைகளை சம்பாதிக்க
ரமழான் கீற்றை
எதிர்பார்த்தவளாக
காத்திருக்கிறேன்

அஸ்மா மஸாஹிம்
அல்பஹ்ரியா ம.க.
தொட்டவத்தை,
பாணந்துறை

### மாற்றம்

நன்மைகள் வளர்பிறையாகி
தீமைகள் தேய்பிறையாகி
இம்மையிலும் மறுமையிலும்
மிளிரட்டும் நம் வாழ்வு

எம்.ஐ. உமாரா
ஹில்கன்றி சர்வதேச பா.
மடவளை

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### பிறையே!

வெண்மேகம் பிளந்து - நீ
விண்தனிலே பிறந்து
பிறையெனக் காட்டிட - நாம்
பிறவிப் பயனடைய
காத்திருக்கிறோம்...
உன்னை
காத்திரமாக நோன்பிருந்து - எம்
முன்பின் பாவங்கள் களைந்து
முதலிரட்சகனின்
அரும்பெரும் திருப்தியுடன்
ரையானினூடே
அடைந்திடுவோம்

அன்ஸார் பாத்திமா நதா
பள்ளிக்குடியிருப்பு

### தலைப்பிறை

முதல் பிறையே...!
உன் வருகைக்காய்
காத்திருக்கிறோம்...
நன்மைக் கடலில் மூழ்கி - எம்
பாவக்கறை போக்கி
ரைய்யான் எனும் சீவன வாயிலின்
சாவி முத்துக்குளித்திட...
வாராயோ நீ
ரமழான் தலைப் பிறையாய்...!

ஏ.எம். சப்ரியா
இஸ்லாஹிய்யா ம.அ.க.
புத்தளம்

### பிறையே வருவாய்!

நன்மைகளை அள்ளித்
தரும் நோன்பை
ஏந்திக் கொண்டு
பிறையே...
வருவாய் நமக்காக!
காத்திருப்போம்
நாம் உனக்காக

எம்.ஐ.எப். புஸ்ரா
கா/ஸாஹிரா தே.பா.
கிந்தொட்ட

### ரமழான் வந்துவிட்டது

பெரிய, சிறிய பாவங்களுக்கு
மன்னிப்புக் கோரும்
சங்கை மிகு ரமழானின்
தலைப்பிறை...
கொடிய நரகை மூடிட
கெட்ட ஷைத்தானை விலங்கிட
கோடி நன்மைகளை சம்பாதிக்க
இரவு முழுக்க நின்று வணங்க
மாண்பும் சங்கையும் மிகு
ரமழான் வந்து விட்டது

ஆர். லிகா
நிக/நம்முவாவ மு.ம.வி.

### பெருங்கொடையாளன்

அல்லாஹ்வின் அருள் மழையை
சுமந்து வரும் ரமழான் பிறையே!
உனக்காகத்தான் காத்திருந்தோம்
சீக்கிரம் பொழிந்திடு
வல்லோனின் அருள்மழையை
நனைவதற்கு

ஆகிலா பானு நிஜாம்
ஹாதியா வளாகம்
குர்கொடுவ

### தலைப்பிறையே வருக!

ஸஃபான் பிறை மறைந்து
ரமழான் தலைப்பிறை காண நாம்
ஆவலாய் தரை வெளியில்
தவம் இருக்கின்றோம்

ஹம்லீர் அனீப்
நத்வதுல் உலமா அ.க.
மூதூர் - 05

### வசந்தகால தலைப்பிறையாய்

பவனி வரக் காத்திருக்கும்
பிறையே வருக!
உன் வருகையால்
எத்தனை உயிரற்ற ஆன்மாக்கள்
உயிர் பெறக் காத்திருக்கின்றன

முபாரக் ரஸ்மி
நத்வதுல் உலமா அ.க.
மூதூர் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய் மொழியின் பெறுபேறுகளை அள்ளிக் குவிப்போம்!

வ. முஹம்மத் நபீல்

தாய்த் திரு மொழி தமிழ்மொழி. நாம் பிறக்க முன்பிருந்தே தமிழ்மொழியை செவிமடுத்துக் கொண்டிருக்கின்றோம். தாயின் கருவறைக்குள் இருளும் தனிமையும் மாத்திரமே எம்மை சூழ்ந் திருந்தபோது எமக்குத் துணையாக இருந்தது நாம் செவிமடுத்த தமிழ் மொழிதான். தரையில் புரண்டு தத்தித் தவழத் துவங்கியபோது நாம் தித்தித்த மழலைத் தமிழ் கண்டு ஒட்டுமொத்த குடும்பமும் மெய் மறந்து ரசித்தது. அதேபோல, நாம் பாலர் பள்ளியில் பாடிய தமிழ் கீதங்கள் கண்டு எல்லாரும் பூரித்தனர்.

இன்னும் கொஞ்சம் அழகியலுடன்...

இன்னும் கொஞ்சம் அர்த்தத்துடன்...

இன்னும் கொஞ்சம் ஆழமுடன்

தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும். ஏனென்றால், நாம் கற்கும் ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு வழியைத் திறந்து விடு கின்றது. அந்த மொழியை ஆழமான அர்த்தத்துடன் கற்கும்போது அது செங்கம்பளம் விரிக்கப்பட்டு நறுமணம் பூசிய பாதையாக மாறி விடுகின்றது.

தமிழ்மொழி மாத்திரமல்ல எந்த மொழியில் தேர்ச்சி பெறுவது என்றாலும் அதற்கு நான்கு அடிப் படையான வழிமுறைகள் இருக்கின்றன.

- செவிமடுத்தல்
- தெளிவான உச்சரிப்புடன் பேசுதல்
- வாசித்தல்
- தொடர்ந்து எழுத்துப் பயிற்சி செய்தல்

வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும் என்பார்கள். அர்த்தமுள்ள வாசிப்பு எமது மொழியாற்றலை விருத்தி செய்யும். தமிழ்மொழியை விருத்தி செய்ய சில குறிப்பிட்ட வாசிப்பு முறைகள் உள்ளன.

- சப்தமிட்டு வாசித்தல்
- தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்
- பொருள் அறிந்து வாசித்தல்
- தொனியை மாற்றி மாற்றி வாசித்தல்
- புதிய சொற்களின் அறிமுகத்திற்காக வரலாறு, புவியியல், அரசியல் போன்ற வெவ்வேறு துறைகளில் வாசித்தல்

வாசிக்கும்போது நமக்கு அறிமுகமாகும் புதிய சொற்களைத் தேடிப்படிக்க ஒரு தமிழ் அகராதி அவசியமாகும். ஆரம்பத்தில் அகராதியைப் புரட்டு வதும் நமக்குத் தேவையான சொற்களைத் தேடுவதும் சிரமமாக இருப்பினும் காலப் போக்கில் அது கைவந்த கலையாகிவிடும்.

''சித்திரம் கைப்பழக்கம் செந்தமிழ் நாப்பழக்கம்'' என்பது ஆன்றோரின் வாக்கு. அதேபோன்று, நாம் தெளிவாகப் பேசும்போதும் அதிகமாக எழுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகள் செய்யும்போதும் நிச்சயம் எமது தாய் மொழி அறிவு விருத்தியடைய அவை உதவி செய்யும்.

இலக்கணம் தமிழ்மொழியின் உயிர் நாடியாகும். இலக்கணம் பற்றிய தெளிவின்றி நிச்சயம் உங்களால் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற முடியாது. மறுபக்கம் இலக்கணம் கற்பது கடினமான காரியமும் அல்ல.

தமிழ்மொழியின் இலக்கணங்களுக்காக தனி ஏடு ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். அதில் வகுப்பறையில் ஆசிரியர் எங்களுக்கு கற்பிக்கும் இலக்கணத்தையும் நீங்கள் சுயமாக தேடிக் கற்கும் இலக்கண விதிகளையும் தொகுத்து எழுதுங்கள்.

வாரம் ஒரு முறை அந்த இலக்கண நூலை முழுமையாக மீட்டுங்கள். அதேபோன்று, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அந்த நூலை முழுமையாக திருத்தி மீண்டும் எழுதிக் கொள்ளுங்கள்.

- வினாக்களுக்கு விடை எழுதுவதுடன் மாத்திரம் உங்கள் அறிவை சுருக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் கற்கும் பாட அலகுகளில் இருந்து நீங்களே கேள்விகளை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- பாட அலகுகளின் இறுதியில் தரப்பட்டிருக்கும் அரும்பதங்களை மனனம் செய்து அவற்றை பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் அமைக்கும் வாக்கியங்கள் வெறும் மூன்று அல்லது நான்கு சொற்களுக்குள் சுருங்கி விடாமல் அடைமொழிகளைப் பயன்படுத்தி அழகாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைய முயற்சி செய்யுங்கள்.
- தமிழ் தினப் போட்டிகளிலும் அவை போன்ற ஏனைய போட்டிகளிலும் பங்கு பற்றுவதை வழமையாக்கிக் கொள்ளுங்கள். அதில் நீங்கள் வெற்றியாளராகத் திகழ 'தமிழ் பொன்மொழித் தொகுப்பு' ஒன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதில் கட்டுரை எழுதும்போதும் பேச்சுக்கும் சுவையூட்டக் கூடிதுமான பின்வரும் விடயங்களை தொகுத்துக் கொள்ளுங்கள்:
  - திருக்குறள்
  - அழகிய கருத்துக்கள் கொண்ட செய்யுள்களும் அவற்றின் அர்த்தங்களும்
  - 'ஆத்திசூடி' போன்ற நீதி நூல்களின் கருத்துக்கள்
  - தமிழ் அறிஞர்களின் போதனைகளும் அவர்களின் வாழ்வில் நடந்த படிப்பினை தரும் சம்பவங்களும்
  - பழமொழிகள்
  - உவமை அணிகள்

இவ்வாறு, உங்கள் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் வளமாக்கக் கூடிய, சுவையூட்டக்கூடிய தகவல்களை அந்த களஞ்சியத்தில் தேடித் தொகுத்துக் கொள்ளுங்கள்.

தமிழ்மொழி அறிவுடனும் உணர்வுகளுடனும் சம்பந்தப்பட்டது. ஆழமாக சுவாசிக்கும் மூச்சுக் காற்றைப்போல அதனை நேசியுங்கள். விட்டுவிடாமல் பயிற்சி செய்யுங்கள். நிச்சயமாக நீங்களும் தமிழ்மொழியில் புள்ளிகளை அள்ளிக்குவிக்கலாம்.

- இலங்கையில் அதிகமான சிறுவர் மற்றும் கல்வியல் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவை பெரும்பாலும் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதைத் தமது பிரதான இலக்காகக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு ஆக்கங்களை தொடர்ந்து எழுதுங்கள். நாம் எழுதும் அனைத்து ஆக்கங்களும் பிரசுரமாகும் என்பது நிச்சயமில்லை. ஆனாலும், முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து எழுதுங்கள்

1. கட்டுரை
2. கவிதை
3. சிறுகதை
4. விஞ்ஞான கட்டுரை
5. பயணக் கட்டுரை
6. பேட்டிகள்
7. விஞ்ஞானிகள், அறிஞர்களின் வாழ்க்கை சம்பவங்கள்
8. தமிழ் பழமொழிகள்
9. மொழிபெயர்ப்புகள்
10. நூல் அறிமுகங்கள்

என உங்கள் எழுத்தாற்றலை படிப்படியாக வளர்த்துக் கொள்ளுங்கள். எந்த எழுத்தாளனும் எழுதத் துவங்கியவுடன் பெரிய எழுத்தாளர் என போற்றி புகழப்படவும் இல்லை. விருதுகளாலும் பரிசுகளாலும் அவனது காலடிகள் அள்ளிக்குவிக்கப்படவும் இல்லை. காலம் தந்த காயங்களைக் கடந்து அவன் கன கச்சிதமாய் போராடிய போது தான் அவனால் வெற்றி பெற முடிந்தது.

தாய்மொழி கற்றுக் கொள்வது சீன வித்தை பழகுவது போன்று மாயஜால வித்தை அல்ல. இது எமக்குள் சுரந்து கொண்டிருக்கும் அற்புத அமுதமொன்றை இன்னும் சற்றுத் தூண்டி விடுவதாகும். தமிழை கற்போம்! தலை நிமிர்ந்து வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

சரியான விடைக்குக் கோடிடுக

1. தன்மை, பன்மை வாக்கியம் எது?
   i. நாம் பாடல் பாடுவோம்.
   ii. எனது வயது ஒன்பது
   iii. அவர்கள் ஓடி விளையாடுகின்றனர்.


2. உயர்திணை படர்க்கை வாக்கியம் யாது?
   i. நீங்கள் பாடம் படித்தீர்கள்
   ii. அவை புல் மேய்ந்தன.
   iii. அவர்கள் புகையிரதத்தில் சென்றனர்.


3. ஒன்றன் பால் வாக்கியம் ஒன்று?
   i. புறாக்கள் கூரையின் மேல் நின்றன.
   ii. புலி மானை வேட்டையாடியது
   iii. சிறுவன் பட்டம் விட்டான்.


4. எதிர்கால வாக்கியம்
   i. கோயில் மணி ஒலிக்கும்.
   ii. சூரியன் அதிகாலையில் உதயமாயிற்று
   iii. யானை காட்டுக்குள் ஆடி அசைந்து செல்கிறது.

5. பொருத்தமான வாக்கியத்தை தெரிவு செய்க.
   i. மான் கூட்டம் ஓடிச் சென்றன.
   ii. மான் கூட்டம் ஓடிச் சென்றது.
   iii. மான் கூட்டங்கள் ஓடிச் சென்றது.


படத்திற்கு பொருத்தமற்ற வாக்கியத்தைக் காண்க

6. 
   i. அதிகமானவற்றை வானில் காணலாம்
   ii. தாரகை எனவும் பெயர் உண்டு.
   iii. பகலில் அழகாக காட்சியளிக்கும்.


7. 
   i. உழவர்களோடு சம்பந்தப்பட்டது.
   ii. கூழங்களை இழுக்க உதவும்.
   iii. வயலை உழுவதற்கு உதவும்.

8. 
   i. இது கத்தும்.
   ii. இது எலி பிடிக்கும்
   iii. இதன் பாதம் பஞ்சு போன்று மென்மையானது

9. நான்கு சமச்சீர்க் கோடுகள் மாத்திரம் கொண்ட உருவத்தை தெரிவு செய்க.

i.  ii.  iii. 

மூன்று உருவங்களுக்குள் ஒன்று மட்டும் வித்தியாசமானது. அவ்வுருவை தெரிவு செய்க.

10. 

11. 

12. கொழும்பினூடாகச் செல்லும் நதியின் பெயர் என்ன?
    i. மகாவலி கங்கை ii. தெதுரு ஓயா
    iii. களனி கங்கை

13. கதிர்காமத்துக்கு அருகில் உள்ள நதியின் பெயர் என்ன?
    i. களனி கங்கை ii. ஜின் கங்கை
    iii. மாணிக்க கங்கை

14. இலங்கை எவரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது?
    i. போர்த்துக்கேயர் ii. ஒல்லாந்தர்
    iii. ஆங்கிலேயர்

15. இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசங்களிலுள்ள ஒரு நகரம் எது?
    i. புத்தளம் ii. திருகோணமலை
    iii. ஹட்டன்

16. ஒரு முறை பூத்துக் காய்த்த பின் அழிந்துவிடும் தாவரம் எது?
    i. பனை ii. வாழை
    iii. தென்னை

கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண் எது?

17. 2, 10, 15, 18, 26, 34
    i. 34 ii. 18 iii. 15

18. 90, 85, 80, 70, 60, 50
    i. 80 ii. 85 iii. 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் கூட்டங்களில் மிகப் பொருத்தமான கூட்டம் எது?

19. i. பீர்க்கு, அவரை, கரட்

ii. கரட், போஞ்சி, புடோல்

iii. புடோல், பீர்க்கு, பாகல்

20. i. சிங்கம், புலி, குரங்கு


ii. மான், மரை, அணில்

iii. சிறுத்தை, சிங்கம், புலி

21. 987, 876, 765, ........, 543 என்ற கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்கு வர வேண்டிய எண் யாது?

i. 654 ii. 645 iii. 643

22. எண் கோலத்திற்கு ஏற்ப AB ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்கள் எவை?




i. 5, 6

ii. 8, 2

iii. 4, 7

23. புத்தக கண்காட்சி ஒன்று ஒரு சனிக்கிழமை ஆரம்பித்து அடுத்த சனிக்கிழமை முடிவடைந்தது. எத்தனை நாட்கள் புத்தக கண்காட்சி நடைபெற்றது?

i. 7 நாட்கள் ii. 6 நாட்கள்

iii. 8 நாட்கள்

24. 60 தொடக்கம் 70 வரையுள்ள எண்களை எழுதும்போது எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

i. 10 ii. 11 iii. 12

25. ஒரு மாணவன் கடைக்காரனிடம் 50 ரூபாவைக் கொடுத்து மாம்பழம் ஒன்று வாங்கியபோது, கடைக்காரன் மேலும் 5 ரூபாவை பெற்று 40 ரூபாவை மீதியாக கொடுத்தான். மாம்பழத்தின் விலை யாது?

26. பின்வரும் தாவரங்களுள் நார் வேர்த்தொகுதி காணப்படும் தாவரம் எது?

i. சோளம் ii. பப்பாசி iii. பனை

27. பின்வருவனவற்றுள் நீரினால் பரம்பல் அடையக் கூடியது எது?

i. தேங்காய் ii. புலி நகம்

iii. எருக்கலை

28. உலர்ந்து வெடிக்கும் முறையில் பரம்பல் அடைவது எது?

i. நாயுருவி ii. பருத்தி iii. அவரை

29. குளிர்ச்சியான சூழலில் வளர விரும்பும் தாவரம் எது?

i. செவ்வரத்தை ii. சலாது

iii. பொன்னாங்கண்ணி

30. முழுமையாக பதப்படுத்திய உணவுகள் எது?

i. பால்மா, சீனி ii. ரின்மீன், பருப்பு


iii. பால்மா, ஜேம்

31. பறவைகளில் காணப்படாத உறுப்பு எது?

i. அலகு ii. இறக்கைகள்

iii. பற்கள்

கீழே தரப்பட்ட உபகரணங்களின் பெயரை எழுதுக.


32. 33. 34.

ஒழுங்கமைத்து எழுதுக.

35. ரோ-ம்-தே-ட-ட் :..............................

36. ஞ்-மு-று-பா-சோ :..............................

37. ய-பு-வி-ப் :..............................

38. நி-கா-லை-ல :..............................

ஒலி மரபுகளை தருக.

39. அணில் :..............................

40. குதிரை :..............................

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

குயிலின் இனிய குரலினிலே
மயிலின் நடன அரங்கினிலே
மறைந்தே இறைவன் இருக்கின்றான்
மகிழ்வுடன் உலகைக் காக்கின்றான்

41. காக்கின்றான் என்பது?

i. இறந்தகாலம் ii. நிகழ்காலம்

iii. எதிர்காலம்

42. கடவுள் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற சமனான கருத்து யாது?

i. குரல் ii. மயில் iii. இறைவன்

43. நடனம் என்பது?

i. கூத்து ii. நாடகம் iii. பா

(44 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்


**கட்டத்தினுள் உள்ள சொற்களை வைத்து பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக.**


மக்கள், நாடு, எழுத்தும், பண்டிகை, பௌத்த, பயம், தகும், வெசாக், வளமிக்கது, எமது, எண்ணும், கண்ணெனத், கொண்டாடுவர்

1. ………………………………………………
2. ………………………………………………
3. ………………………………………………

**பின்வரும் படங்களை ஆதாரமாக வைத்து பழமொழி ஒன்றை எழுதுக.**

4.  ………………………………

5.  ………………………………

6.  ………………………………

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

7. மகே சுது போலய ………………………………
8. கலு பூசா துவனவா ………………………………

**பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

9. **WORLD** ………………………………
10. **FAMILY** ………………………………

11. ஒருவன் காலை 7.00 மணிக்கு புறப்பட்ட பிரயாணத்தை அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு முடித்துக் கொண்டான் எனின், அவன் பிரயாணத்திற்காக எடுத்த நேரம் யாது?
   i. 27 மணித்தியாலங்கள்
   ii. 15 மணித்தியாலங்கள்
   iii. 10 மணித்தியாலங்கள்

12. ரூபா 100 இனைக் கொடுத்து ரூபா 34.50 பெறுமதியான பேனையொன்றினை வாங்கிய எனக்கு மிகுதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு?
   i. ரூபா 66.00 ii. ரூபா 65.50
   iii. ரூபா 65.00

13. உரு ABEF இன் சுற்றளவு யாது?
   i. 280 கி.மீ. ii. 280 மீ. iii. 400 மீ.

14. குமாரின் நிறை விமலனின் நிறையை விட அதிகம். விமலின் நிறை அமிலனின் நிறையை விட அதிகம். இதன்படி,
   i. குமாரும் அமிலனும் சமமான நிறை உடையவர்கள்.
   ii. குறைந்த நிறையுடையவன் அமிலன் ஆவான்.
   iii. மிகக் கூடுதலான நிறையுடையவன் விமல்.

**அடுத்து வரும் எண்களை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் நிரப்புக.**

15.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 8 | 6 | 4 | 12 | 9 | 16 | 12 | … | … |

16.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 22 | 24 | 26 | 33 | … | … |

**பின்வருவனவற்றை தசமத்தில் எழுதுக.**

17. $\frac{4}{10}$ = ………. 18. $3\frac{2}{10}$ = ……….

**தரப்பட்ட எண்களின் 9 இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையில் எதுதுக.**

19. 53 44 63 47 74 76 81 18 54 89

9 இன் மடங்கு

……….. ………..

……….. ………..

**பின்வரும் எண்களை உரோம இலக்கங்களில் எழுதுக.**

20. பத்தொன்பது ………………………………
21. பதினாறு ………………………………

22. பரீட்சை மண்டபம் ஒன்றில் முற்பகல் 11.45 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய பரீட்சை அரை மணித்தியாலங்கள் தாமதமாகி ஆரம்பிக்கப்பட்டது. பரீட்சை ஆரம்பித்த நேரத்தை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஐந்து மீற்றர் துணியில் 350 செ.மீ. துணி விற்கப் பட்டால் மிகுதியாக இருக்கும் துணியின் அளவு யாது?

i. 150 செ.மீ ii. 1 மீ 50 செ.மீ.

iii. 1.5 மீ.

| பொருள் | விலை | சதம் |
|---|---|---|
| 2 கி.கி. சீனி | 300 | 00 |
| 1 கி.கி. கிழங்கு | 70 | 00 |
| 1 கி.கி. பருப்பு | 110 | 00 |

24. 250 கிராம் கிழங்கு, 2 கி.கி. பருப்பின் விலை யாது?

25. 250 கிராம் பருப்பு, 250 கிராம் கிழங்கு ஆகிய இரண்டினதும் விலை எவ்வளவு?

26. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப் பதற்கு பயன்படுத்தப்படுகின்ற வேலையை இலகுவாக்கும் பொறி எது?

i. கப்பி ii. நீர் சில்லு

iii. பற்சில்லு

27. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய்?

i. கழிச்சல் ii. கொள்ளை

iii. யானைக்கால்

28. கொடிகளில் காய்க்கும் தாவரம் எது?

i. இறப்பர் ii. பலா

iii. மாதுளை iv. புடோல்

29. வாசனை மிக்க பூ?

i. போகன் விலா ii. செவ்வரத்தை

iii. பவள மல்லிகை

30. உடலுக்கு சக்தியைத் தரும் உணவு எது?

i. ஈரப்பலா ii. வெண்டி iii. பசளி

31. அதிகம் இரும்புச் சத்துள்ள உணவு?

i. மரவள்ளி ii. பசளி iii. பால்

32. 10 வயது மாணவனின் சராசரி உயரம் யாது?

i. 150 செ.மீ. முதல் 155 செ.மீ. வரை

ii. 125 செ.மீ. முதல் 145 செ.மீ. வரை

iii. 110 செ.மீ. முதல் 120 செ.மீ. வரை

33. 10 வயது மாணவனின் சராசரி நிறை யாது?

i. 22 கி.கி. முதல் 29 கி.கி. வரை

ii. 12 கி.கி. முதல் 25 கி.கி. வரை

iii. 22 கி.கி. முதல் 39 கி.கி. வரை

34. மாட்டு இனங்களுக்கு ஏற்படும் நோய்களுள் ஒன்று

i. கழிச்சல் ii. நீர் வெறுப்பு நோய்

iii. கொள்ளை நோய்

35. இலங்கையின் தேசியக் கொடி, அரச இலட்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு?

i. நிறை குடம் ii. அரச இலை

iii. வாளேந்திய சிங்கம்

36. மாவட்டத்திற்கு பொறுப்பாக இருப்பவர்?

i. பிரதேச செயலாளர்

ii. மாவட்ட செயலாளர் iii. ஆளுநர்

37. 5 இனாலும் 4 இனாலும் 3 இனாலும் மிகுதி இன்றி பிரிபடக் கூடிய எண் யாது?

i. 50 ii. 120 iii. 70 iv. 80

38. தபால்பெட்டி ஒன்றில் முக்கியமாக குறிக்கப் பட்டிருப்பது.

i. கடிதங்கள் எடுக்கும் திகதி

ii. கடிதங்கள் எடுக்கும் நேரம்

iii. கடிதங்கள் அனுப்பும் நேரம்

39. அதர் சி கிளாக் என்பவர்?

i. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்

ii. கணினியை கண்டு பிடித்தவர்

ii. விஞ்ஞானியாவார்

40. தொல்பொருள் பெறுமதி முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம்?

i. கொழும்பு ii. புத்தளம்

iii. சீகிரியா

பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து தருக.

41. செயற்கை ..................................

42. புதுமை ..................................

43. வயோதிபம் ..................................

ஆண்பால் தருக.

44. குறத்தி ..................................

45. குடைச்சி ..................................

46. குரு பத்தினி ..................................

இளமை மரபு தருக.

47. மீன் ..................................

48. அணில் ..................................

49. தென்னை ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மைச் சொற்களை தருக.

50. என் ..........................................

51. அவள் ..........................................

52. முள் ..........................................

பிழை திருத்தி எழுதுக.

53. புடவை ..........................................

54. நாகரீகம் ..........................................

55. பாகறக்காய் ..........................................

ஒத்த கருத்து தருக.

56. உதிரம் ..........................................

57. ஊன் ..........................................

58. விழி ..........................................

'நான் பார்த்த மலர் கண்காட்சி' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

**விடைகள்**

1. பௌத்த மக்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடுவர்.
2. எமது நாடு வளமிக்கது.
3. எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.
4. கழுதை அறியுமா கற்பூர வாசனை.
5. ஆனைக்கும் அடி சறுக்கும்.
6. புலி பசித்தாலும் புல் தின்னாது.
7. என்னுடைய வெள்ளை பந்து.
8. கறுப்பு பூனை ஓடுகிறது.

**(41 ஆம் பக்கத் தொடர்...)**

44. இப்பாடலுக்கு பொருத்தமான தலையங்கம்?
i. குயில் ii. மயில் iii. கடவுள்

45. இனிய குரல் உடையது?
i. மயில் ii. இறைவன் iii. குயில்

46. பாடலில் இடம்பெற்ற அடைமொழிச் சொல் ஒன்று?
i. இனிய ii. மகிழ்வுடன்
iii. குயில்

47. மயிலின் கூட்டம்?
i. படை ii. குழாம்
iii. அணி

9. உலகம்
10. குடும்பம்
11. i
12. ii
13. i
14. ii
15. 20, 15
16. 36, 39
17. 0.4
18. 3.2
19. 54, 63, 72, 81
20. xix
21. xvi
22. பி.ப. 12.15 மணி
23. i
24. ரூப 237.50
25. ரூப 45.00
26. i
27. ii
28. iv
29. iii
30. i
31. ii
32. ii
33. i
34. i
35. iii
36. ii
37. ii
38. ii
39. iii
40. iii
41. இயற்கை
42. பழைமை
43. இளமை
44. குறவன்
45. இடையன்
46. குரு
47. குஞ்சு
48. பிள்ளை
49. கன்று / பிள்ளை
50. எங்கள்
51. அவர்கள்
52. முட்கள்
53. புடைவை
54. நாகரிகம்
55. பாகற்காய்
56. இரத்தம்
57. உணவு
58. கண்

**விடைகள்**

1. i
2. iii
3. ii
4. i
5. ii
6. iii
7. ii
8. i
9. i
10. ii
11. iii
12. iii
13. iii
14. iii
15. iii
16. ii
17. iii
18. ii
19. iii
20. iii
21. i
22. ii
23. iii
24. i
25. 15
26. i
27. i
28. iii
29. ii
30. iii
31. iii
32. அம்மியும் குழவியும்
33. திருகைக்கல்
34. ஆட்டுக்கல்
35. தேரோட்டம்
36. பழஞ்சோறு
37. வியப்பு
38. காலநிலை
39. கீச்சிடும்
40. கனைக்கும்
41. ii
42. iii
43. i
44. iii
45. iii
46. i
47. ii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 22

## தலைப்பு: நோன்பு துறக்கும் நேரம் (இப்தார்)

### பரிசில் பெறும் சித்திரங்கள்



ஏ.எம்.எப். மஹா
அ/நாச்சதுவ மு.ம.வி.
நாச்சதுவ



ஏ. அஹ்மத்
அல் மதீனா ஆ.பா.
புத்தளம்



சதாத் எப். சாபினாஸ்
நெய்தல் நகர்
மூதூர் 01


### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



மாஹிர் ஆயிஷா
தாகா நகர்
மூதூர் 07



எப். சனா ரிஸ்னா
க/ஜாமிஉல் அஸ்ஹர் ம.க.
உடதலவின்ன



எம்.ஆர்.எப். ஸம்லா
பு/ஸாஹிரா ஆ.பா.
புத்தளம்



ஏ.எப். அஸ்கா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



எம்.எப்.எப். ரஸா
சிலா/சவரானை மு.வி.
சிலாபம்



எம்.என். அகீலா பேகம்
குளி/தொரகொடுவ மு.வி.



எம்.என்.எப். நுஹா
நாச்சதுவ மு.ம.வி.
நாச்சதுவ



மு.ஹா. நிதாஸிபா
மட்/மமஸ நூறாணியா வி.
காத்தான்குடி 06




எம்.ஆர். மாஹி அஹமட்
ஸாஹிரா ஆ.பா.
புத்தளம்



ஆகில் மொஹமட்
அல் ஹுமைரா மு.வி.
எதண்டவெல



சுவைரனா சுபைர்
அல் மு·மினாத் பெ.அ.க.
அக்குரனை



எம்.ஏ.எப். அம்னா
க/ஜாமிஉல் அஸ்ஹர் ம.க.
உடதலவின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

### "தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"

### இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..



நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**YOU RING! WE BRING!**

**FREE HOME DELIVERY SERVICE**

City Limits Only / Conditions Apply

For your complete and competitive books & stationery shopping experiences..

**ISLAMIC BOOK HOUSE**

77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.

Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Hot Line 011 5 925 935

E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk